[illegible]

[illegible] 6 [illegible] 5

[illegible] 1932


తె

తె211,N27 SN

N32.6.5

186922

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF
16 FEB 1934
MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௬. § ஆங்கீரச-மார்கழி 1932-டிசம்பர் § திங்கள் ரு.

உள்ளுறை. பக்கம்.


| | | |
|---|---|---|
| க. | கல்வியும் கைத்தொழிலும். | 161 |
| உ. | சங்கரலிங்க உலா. | 163 |
| ௩. | செட்டிநாட்டுப் பத்திராதிபரின்கெட்டிக்காரத்தனம். | 164 |
| ௪. | சிவநேசனுக்கு மதிப்புரை. | 167 |
| ரு. | திருக்கோயிலும் திருத்தொண்டரும். | 169 |
| ௬. | வேளாளர்க்கு ஓர் அறிவுறூஉ. | 179 |
| எ. | சிவபெருமானே உண்மை முத்தியைக் கொடுப்பவர். | 182 |
| அ. | சட்டம். | 184 |
| ௯. | கலிகால வரலாறு. | 185 |
| க0. | தாழ்ந்த வகுப்பார்களே! | 192 |
| கக. | தந்தைதாய்ப் பேண். ... | 193 |
| கஉ. | இராஜராஜேஸ்வரி அம்மன் பதிகம். | 196 |
| க௩. | மார்கழி மாதம் திருவெம்பாவை. | 198 |


ஆசிரியர் ராம. து. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

சென்னைப் பதிவு எண் 2302.

# செய்தித் திரட்டு.

**உள்ளூர்:—** மழை மிகுதியாகப் பெய்து, ஏரி குளங்கள் நிரம்பிப் பெருகின.

குமார விநாயகர் திருக்கோயிலிலும் சிவாலயத்திலும் இம்மதி ௨௮ திருவாதிரைத் தெரிசனம் நடைபெறும்.

குடியிற் சிறந்த குமரன் — கார்த்திகை ௨௮ காலை தன் தந்தையைத் தாக்கியதுடன், ஒரு வாரத்திற்குள் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்று விடுவதாகவும் சொன்னான். பிள்ளையைப் பெறுவது கொள்ளிக் குத்தானே. கடைகெட்ட நாகூர்க்கண்ணி, கழிபட்ட அருணாசலம், கசாயிக் காரப் பேர்வழிகள் ஆதிய கயவர்களின் கூட்டுறவாலும், பஞ்சமாபாதகங்க ளில் நடுநாயகமாக விளங்கும் மதுவின் மயக்கத்தாலும், எதற்கும் துணிந்து பிதுர்க் கொலை புரிதலே பிதுர்க் கடனாக மதித்தனன் போலும்.

> "கொலைகளவு கட்காமம் கோபம்விட்டார்க் கன்றோ
> மலையிலக்கா நின்னருள்தான் வாய்க்கும்"

என்ற நலனறியாதான்.

**பிள்ளையார்நோன்பு:—** இம்மதி ௧௮ ஞாயிற்றுக் கிழமை சஷ்டி யன்று கொண்டாடத் தக்கது.

**குன்றக்குடி:—** கார்த்திகைமீ ௨௬ திருக் கார்த்திகைக்குத் திர ளான ஜனங்கள் வந்து தரிசித்தார்கள். மழை மிகுதியின் காரணமாகத் திருவீதிகள் சேறுளைந் திருந்தபோதிலும் கும்பிடுதண்டப் பிரார்த்தனைக் காரர்கள் மனந் தளராது தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றியது போற்றத்தக்கதா யிருந்தது.

**வைரவன் கோவில்:—** கார்த்திகைச்சஷ்டி சூரசம்மார உற்சவம், கார்த்திகை ௧௩ தொடங்கி ௧௮ சூரசம்மாரம்; ௧௯ தீர்த்தவாரி கைலா சவாகனக் காட்சிகளுடன் வெகுசிறப்பாய்நிறைவேறியது. வைரவன்கோவில் ஸ்தலபுராணத்தைச் 'சிவநேசன்' இராமசாமி செட்டியார் செந்தமிழ் வசன நடையாயெழுதி அச்சிட்டுப் புத்தகவடிவாக்கிக் கொண்டுவந்து, வைரவக்கட வுள்சந்நிதானத்தில் வாசிக்கச்செய்து வழங்கினர்.

**கீழச்சிவல்பட்டி—அளகாபுரி:—** ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசர் கலாசாலையின் இரண்டாவதாண்டு பரிசளிப்புவிழா, இராமநாதபுரம் ஜில்லா நீதிபதி மகாராஜஸ்ரீ R. S. சங்கரஐயர் B. A. B. L. அவர்கள் தலைமையில், கார்த் திகைமீ ௧௪ மிகவிமரிசையாகக் கொண்டாடப்பெற்றது.

இவ்வூரில் கார்த்திகைமீ ௧௯ குருபூசைமடத்துத் தெருவில் நாஷ னல் அச்சுக்கூடம் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது.

OFFICE OF THE REGISTRAR OF ...
16 FEB 1931
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௬ } பலவான்குடி-ஆர். ீ ஈச—மார்கழி { திங்கள் ரு.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## கல்வியும் கைத்தொழிலும்.

வடக்கே பனிமலைமுதல் தெற்கே குமரிமுனை வரை நீண்டு பரந்த நிலப்பரப்பை யுடைய நமது பாரதநாடு, உலகத்துள்ள எல்லா நாடுகளும் தன்னை விரும்பும் எழிலுடையதாய், தான் எதுபற்றியும் எத்துணையும் எஞ்ஞான்றும் எந்நாட்டையும் விரும்பாத ஏற்றமுடையதாய், 'நாடென்ப நாடா வளத்தன' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு வாய்ப்புடை இலக்கியமாய்விளங்கும் இயற்கைவளம் நிரம்பிய இயல்புடைய நன்னாடாகும். தெய்வம் பராவுஞ் செந்நெறி படர்ந்த திருநாடு எனத் தேசமெலாம் புகழுஞ் சிறப்புடைய தவ நாடாகும். அரசியல், கல்வி, செல்வம், கைத்தொழில், வேளாண்மை, வியாபாரம், சிற்பம், மருத்துவம் முதலான எல்லாத் துறைகளினும் மேம்பாடுற்றது நமது இந்திய நாடு என்பது சரித்திர வாராய்ச்சியால் நன்கு தெளியலாம்.

சென்றசில நூற்றாண்டுகளாக அரசியன் மாறுதலாலும், வேற்றுமொழிப்பயிற்சியாலும், தாய்மொழிப் பயிற்சியும் நாட்டுக் கைத்தொழிலும் நாளுக்கு நாள் சுருங்க, நமது நாடு வறுமைக் கிடனாய் வருந்துவதாயிற் றென்பது.

"உற்றதொழில் செய்வோர்க் குறுபஞ்ச மில்லையாம்
பற்றுசெபத் தோர்க்கில்லை பாவங்கள்—முற்றும்
மவுனத்தோர்க் கில்லை வருகலகந் துஞ்சாப்
பவனத்தோர்க் கில்லை பயம்."

என்ற நீதிமொழிப்படி, அவ்வவ் வருணாச்சிரமிகள் அவரவர்கட்குரிய கருமங்களைக் கடைப்பிடித் தொழுகினால், அவர்கள் ஒன்றானுங் குறைவுடையோராகார்.

நாடுமுன்னேற்றமுற நாட்டுமொழி வளர்ச்சி இன்றியமையாதென்பர். நம்மனோர் ஆங்கில மொழியைப்பயின்று அரசியல் அலுவல்களை அவாவத் தொடங்கவே, நாட்டு மொழிப்பயிற்சி நாடுவாரற்றதாயிற்று. அவ்வவ் வருணங்கட்குரிய தொழின்முறைகளும் மாறுதலாயின. எல்லாரும் உத்தியோக மடைதலையே நோக்கமாகக் கொண்டு அத்துறையி லிறங்கவே, கைத்தொழின் முறைகளும் நாளடைவிற் கைநழுவலாயின. உலகவாழ்க்கைக்குரிய பண்டபதார்த்தங்கள் முதலிய யாவற்றுக்கும் அந்நிய நாட்டை யெதிர்பார்க்கும் நிலையை அடைந்தோம். அதனால், நம் நாட்டுப் பொருள் அந்நிய நாட்டில் அதிகமாகக் கழியவே, நம்நாடு பொருளாதார நிலையிற் பின்னடைய நேர்ந்தது.

இதனை யுய்த்துணர்ந்த நம் நாட்டுப் பெரியோர் பலர், நாட்டுக் கைத்தொழில்களை விருத்திசெய்ய வேண்டிய துறைகளி லுழைப்பாராயினர். தங்கள் குறைபாடுகளைத் தாமே திருத்திக்கொள்ளுதலை மேற்கோடாது, சிலர் அரசியலிற் புகுந்து நமது குறைகளைத் தவிர்ப்பான் கருதிச் சில்லாண்டுகளாக மன்றாடியும் பயன் படாமைகண்டு, இதுபோது வருணாச்சிரம தருமங்கள் மயங்கு நெறியில் மக்களை யுழலச் செய்தற் கொருப்பட் டுள்ளார்கள். ஆடுமாடுகளைப்போல் பறையர் பார்ப்பார் என்ற வேறுபாடின்றி எல்லோரும் ஒன்றானால் தான் நமது நாட்டில் பாக்கியம் பொங்குமாம். இவையெல்லாம் பயனில் செயலன்றி வேறென்னே!

நமது நாடு முன்னேற்ற மடைய வேண்டின் பிற நாட்டாரைப்போல் நமது தாய்மொழிகளைப் போற்றி, அம் மொழிகளிலேயே எல்லா நடவடிக்கைகளும் நடைபெறச் செய்யவும், அம் மொழியிற் றேறியவர்க்கு அரசியல் அலுவல்கள் பலவும் அமையும்படி செய்யவும் [illegible] முன்னின் றுழைக்கவேண்டும்.

[library stamp]



உலக வாழ்க்கைக்கு வேண்டும் பல்வகைப் பண்ட பதார்த்தங்களை நம் நாட்டிலேயே தயாரித்துக்கொள்ளும் வழிகளில் நம்மக்களை நாம் பழக்கவேண்டும். மனிதர்களாலும் மிருகங்களாலும் செய்யும் வினைகள் யாவும் இயந்திரங்களினாலே செய்யப்பெறுங்காலம் இதுவாயிருக்கிறது. ஊண் உடை முதலிய வெல்லாமும் இயந்திரத்தினாலேயே தயார் செய்யப்படுகின்றன. ஆதலால், அவ்வவ் வினைக்குரிய கருவிகளுக்கு அந்நிய நாட்டை அவாவாது, நம் நாட்டிலேயே அவை செய்யுமுறையைப் பரவச் செய்யவேண்டும். நம் நாட்டுக் கைத்தொழிற் பொருள்களையே நாம் ஆதரிக்க வேண்டும். வேளாண்மையை விருத்திசெய்யவேண்டும். வாணிபத்துறையை வளப்படுத்தவேண்டும். இன்னோரன்ன பொருளாதார நிலையைப் புறக்கணித்து, விதிவிலக் கயர்ந்து மக்களை யொழுகச் செய்தலால் ஒரு பயனும் உண்டாகாதென்ப தொருதலை.

ஆதலால், நேயர்களே! நாடுநலம்பெற, நமது தாய்மொழிக் கல்வியையும் கைத்தொழிலையும் விருத்திசெய்வதில் கண்ணுங் கருத்துமா யுழைக்க வேண்டுதலே நமது பெருங்கடமையாகும்.

---

## சங்கரலிங்க உலா.

சொற்பொருட் சுவையும், கற்பனைத் திறனும், சிவசமயச் சீர்மையும், அடியவர் அருணெறியும், சிவபரத்துவமும் மிக்கு விளங்கும் பழமையான இந்நூலை, ஏடுகளினின்றும் பெயர்த்தெழுதிச் செப்பஞ் செய்து, குறிப்புரைகளுடன் அவ்வவ்விடத்துக் கேற்ற பல மேற்கோள்களையும் எடுத்துக் காட்டிச் செவ்விய முறையிற் பிரசுரிக்க உதவிய பேருபகாரி, தமிழ்த்தாயின் தனித்தவப் புதல்வராகிய மறைத் திருவாளர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்ட்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களாம். இப்பதிப்பு, கற்பார்க்கு ஆசிரியருதவியின்றியே நூற்பொருளை யிலகுவா யறிந்து கோடற்கு ஏற்ற வுதவியாகும். இவ்வுயரிய நூலை நமது சிவநேசனோ டிணைத்து, சிவநேசன் சிறப்புற்றுமிளிரும்படி வெளியிடற்குதவிய உயர்திரு ஐயரவர்கட்கு மிகவும் நன்றி கூறுகின்றோம். பதிப்புரிமை ஐயரவர்கட்கே. (ப—ர்)

---

186922

உ

# செட்டிநாட்டுப் பத்திராதிபரின் கெட்டிக்காரத்தனம்.

நேயர்காள்! "சிவநேசன்" கார்த்திகைத் திங்கள் வெளியீட்டில், "செட்டிநாடு" என்ற மகுடமிட்டு, 'நட்டல், மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற் பொருட்டு' என்ற வள்ளுவர் வாய்மொழியை உள்ளூறுத்து யாம் வரைந்தவற்றை அநுகூலமாகக் கொள்ளாது, அப் பத்திராதிபர் எம்மையும், 'சிவநேசன்' ஆசிரியர்தம்மையும் குறித்து ஏதேதோ குறைகூறத் தொடங்கினர். அவர் கூற்றைப் படியெடுத்துரைத்து விடையிறுக்கப் புகின் மிக விரியு மாதலின், ஈண்டு சில வற்றைப் பிண்டமாகக் கொண்டுரைப்பாம்.

"செட்டிநாடு" நாட்டுக்கோட்டை நகர தனவைசிய மக்களின் நலன்கருதி யுழைக்கும் பத்திரிகை யென்பது வெளிப்படை. நகரத்தார்களோ, சிவதிருப்பணியே குலதிருப்பணியாகக் கொண்டு செகம் புகழ வாழுஞ் சீரியோர்கள். தமிழ்நாட்டு முடிகெழு மூவேந்தருக்குப் பின் திருப்பணிச் செல்வர்களாய்ச் சிறந்து விளங்குகிறவர்கள். சைவசமயாசாரியர்களின் தேவாரப் பாடல்பெற்ற திருத்தலங்கள் பலவும் இவர்களது திருப்பணியுடையவாய்த் திகழ்கின்றன. இவ் வாறிருக்க: சிவஸ்தலங்களுட் சிறந்த தொன்றாய், விராட்புருடனுக்கு மூலாதாரமாய், பஞ்சபூத ஸ்தலங்களிற் பிருதுவிஸ்தலமாய், சோழராஜதானி ஐந்தனுட் டொன்மை வாய்ந்ததாய், மனுச்சோழன் முதலிய மன்னர் மன்னர்கள் அரசுவீற்றிருந்து மனுமுறை வழாது செங்கோல் செலுத்தியதாய், சம்பந்தர் முதலிய சமயாசாரியார், பட்டினத்தார் முதலிய பரமஞானிகள், இன்னும் எண்ணிறந்த அன்பர் அடியவர்கள் அருளிப்பாடலாலும் அரும்பெருந் தொண்டுகளாலும் ஆண்டவனது அருள்வயத்தராய் அற்புதச் செயல்கள் பற்பல புரிந்த பொற்புறு பதியாய், சப்தவிடங்க க்ஷேத்திரங்களுள் வீதிவிடங்கப் பெருமான் வீற்றிருந் தருளும் சீரூராய் விளங்குவது, தேரூரும் புகழ்சான்ற திரு ஆரூர் ஆகும்.

இத்தகு மகிமாதிசயங்கள் நிறைந்த புண்ணிய ஸ்தலத்தைத் தியாகன் என்னும் புலைய னொருவனைச் சுட்ட சுடுகாடு என்று கிறித்



துவ மதத்தர் எழுதியதை ஆதாரமாகக் கொண்ட கட்டுரையை ஆராய்ச்சியுரை யென வேற்ற செட்டிநாட்டுப் பத்திராதிபரின் விநய புத்தி விசால புத்தியே. அன்றியும், "தஞ்சை பெரியநாயகி அம்மன் கோவில், பெரிய நாயகம் என்ற புலைச்சியின் சுடுகாடு; அதனை யடுத்த மாரியம்மன் கோவில் மாரியம்மை யென்ற புலைச்சியின் சுடுகாடு." என்று கைகூசாது எழுதிய நவீன ஆராய்ச்சியாளர் கட்டுரையை, நமது செட்டிநாட்டுப் பத்திராதிபர் கண்கூசாது பார்த்து, வாய்கூசாது படித்து, மனங்கூசாதச் சடித்து மடித்துப் பிரசுரித்து மகிழ்வாராயினர்.

அன்பர்களே! ஆதாரமற்ற இவ் வாபாசக் கட்டுரைக்கும் செட்டிநாட்டுக்கும் இம்மியேனும் இயைபுண்டாமோ? "பத்திரிகையின் பெயருக்கும் மதிப்பிற்கும் பொருந்தாத இத்தகு போலி யுரைகள் வெளிவரலாகா; ஆனால், அச் சமூகத்தார் பலர்க்கும் அருவருத் தொதுக்கத்தக்கதாகும்." என்ற வுள்ளக்கிடையை யுன்னாது, செட்டிநாட் டாசிரியர் எம்மீது பாய்ந்ததோ டமையாது, எமதுரையை வெளியிடலாகாது என சிவநேசன் ஆசிரியர்க்குங் கட்டளை யிடுகின்றார். என்னே! இவரது நுண்மாண்புலம் நுழைந்தவாறு.

பத்திரிகை பாங்கிற் படாது, மிகப் பழையகாலமுதல் தியாகேசர் எனப் போற்றிப் புகழும் பரதெய்வத்தைத் தியாகன் சாம்பான் என்னும் பறைத் தெய்வமாகக் கூறுவது, பொதுஜனங்கட்கு மருட்கையை யுண்டுபண்ணுமே யல்லாது, உள்ளதை உள்ளவாறு கூறும் எமது உரை தப்பெண்ணத்தைக் கற்பித்து, மருளவையாது என்பது அறிவோர் அறிவர். மேற்காட்டிய திருக்கோயில்களெல்லாம் பறையன் பறைச்சியர் சுடுகாடுகள் என்னும் ஆபாச வுரையை ஆராய்ச்சிக் கட்டுரை யென்கின்றார். செட்டிநாட் டாசிரியருக்குக் 'கட்டுரை யினையது; ஆராய்ச்சியுரை யித்தன்மைத்து; நிகழ்ச்சி யுரை யிது' என்ற பாகுபா டில்லைபோலும். செட்டிநாட்டில் வந்த அவ்வுரை, சொற்றொடராக்கம் பொருட்டொடர்பு இயைபு முதலிய வின்றி வெற்றெனத் தொடுத்திருத்தலினாலும், அத் தலத்தைப் பற்றிய தொன்னூல்கள் கல்வெட்டுகள் செப்பேடுகள் ஆதிய ஆதாரங்களொன்றையு மடையாது, வேற்றுமதத்த ரொருவரின் வெற்றுரையைப் பற்றுக்கோடாகக் கொண்டிருத்தலினாலும், கட்டுரையு மாகாது, ஆராய்ச்சியுரையு மாகாது ஆபாசவுரை யாயிற்று. அதுபற்

றியே, யாம் அக் கட்டுரையாளரை ஒரு பொருட்படுத்தாது, அதனை வெளியிட்ட செட்டிநாட்டுக் கறிவுறுத்தினேம். அது பிற பத்திரிகைகளில் வெளிவரின், அறிஞரொருவரும் அதை ஒரு பொருளாக மதியார் என்க. தெய்வமே இல்லை யென்னும் நாத்திகக் கட்டுரைகளைத் தாங்கிச் சில பத்திரிகைகள் வெளிவரவில்லையா?

நண்பர்காள்! "திருக்கோயிலில் தெய்வம் ஒன்று உண்டு; அது யாவருக்குஞ் சொந்தமாயிருக்க, பறையர்களை மாத்திரம் என் தரிசிக்க அதனுள்ளே விடக்கூடாது." என்று காங்கிரஸ் வாதிகள் கழறுகிறார்கள். நமது செட்டிநாட்டுப் பத்திராதிபரோ, பறையனே தெய்வம், பறைச்சியே தேவி என்ற ஆராய்ச்சியிற் றலைப்பட்டுள்ளார். இதுவா ஆராய்ச்சியுரை? அற்றன்று: தீண்டாதார் ஆலயப் பிரவேசத்தில் செட்டிநாட் டாசிரியருக்கு முழு மனமும் முனைந்து நிற்கிறது என்பதை வெளிப்படுத்து முகத்தான் அக் கட்டுரையை யது தாங்கிவந்தது என்பர். பலருக்கும் பொதுவான பத்திரிகை யுண்டு; சிறப்பாகச் சிலருக்கே யுரிய பத்திரிகையும் உண்டு. இவ் விரண்டில் செட்டிநாடு எதைச் சேர்ந்தது? இக் கட்டுரை செட்டிநாடு தாங்கத் தக்கதா? தகாததா? என்று அறிய வலுவற்ற முழுமோசத் தன்மை யாரிடத்துள்ளது என்பது நேயர்கள் அறியத்தக்கதே.

"அமெரிக்காவில் ஓர் குதிரை முட்டையிட்டது" என்றாற் போல்வதை இக்கட்டுரைக்கு உவமைகாட்டுகிறார். இதனால், நிகழ்ச்சி, ஆராய்ச்சியென்பன செட்டிநாட்டாசிரியர்க்கு ஒன்றேபோலும். குதிரை முட்டை யிட்டாற் பறக்கும். அதைப்பற்றிய ஆராய்ச்சி வேண்டா. காட்சி, கருதல், உரைமுதலிய அளவைகளானும் அநுபவத்தானும் உறுதி செய்யப்பெறும் திருவாரூர்ப் பூங்கோயிலாதிய தெய்வத் தானங்களைப் பற்றிய ஆராய்ச்சி செட்டிநாட்டுக்குச் சிறப்புரிமையாதலின், அவ் வாராய்ச்சியைப் பற்றிய வோர் குறிப்போ மறுப்போ எழுதப்பெறவில்லையென்று யாம் சுட்டினேமன்றி, குதிரைக்கொம்பைப்பற்றிக் குறிப்பெழுதக் கூறினேமில்லை.

சுருதி யுக்தி அநுபவத்துக்கு மாறாய், ஆதாரமற்றதாய், ஆஸ்திகவிரோதமாயுள்ள ஆபாசவுரைக்குத் தமது பத்திரிகைப் பத்தியைக் கொடுத்து, உள்ளதை உள்ளவாறுணர்த்தும் எமதுரைக்கு இடந்தருவது அழகல்ல எனச் சீற்றமுற்றுச் சிவநேசன் ஆசிரியர்க்குக் கட்டளை தருவது, சிவதருமமே குலதருமமாகக் கொண்ட செட்டிநாட்டுக்குச் சீரிய செயலாமோ?



பூனா ஒப்பந்தத்திற்குப் பிறகு, ஆலயப்பிரவேசத்தில் அவாக் கொண்டுழைப்போர்க்கு இச்சரிதம் உதவியாயிருக்கும் என்னுங் கருத்துப் பற்றி செட்டிநாடு தாங்கி வந்தது என ஆராய்ச்சியாளர் தோற்றுவாய் செய்திருக்க, "அஃதோர் ஆச்சரியமான சரித்திர ஆராய்ச்சிக் குறிப்பாமுறைபற்றி வெளியிடப்பட்டது." என்றுசெட்டிநாட்டாசிரியர் செப்புவது தப்புச்சமாதானமே யாகும். "ஆதித்திராவிடரே ஆலயத்துள் தெய்வமாயிருக்க, அவர்களைக் கோயிலுட் புகத் தடைப்படுத்துவது எற்றுக்கு?" என, ஆலயப் பிரவேசத்துக்கு அடிப்படை கோலுவதாயிருக்க, குதிரைமுட்டைபோன்ற ஆச்சரிய சம்பவமாம் முறைபற்றி அவ்வுரை வெளியிடப்பட்டது என்று கூறுவது செட்டிநாட்டுப் பத்திராதிபரின் கெட்டிக்காரத் தனமே யாகும்.

திருவாரூர்ப் பூங்கோயில், தஞ்சைப் பெரியகோயில்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் பல, மறைத்திருவாளர் மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர்முதலான அறிவான்ற சான்றோர்கள் பலராலும் வெளியிடப்பெற்றிருக்கின்றன. அவற்றை யெல்லாம் விட்டு, கிறித்துவமத வேதநாயக சாஸ்திரியார் கூற்றுக்கு நமது செட்டிநாட்டாசிரியர் இலக்காகியது என்னையோ?

**தெய்வசிகாமணி.**

---

# சிவநேசனுக்கு மதிப்புரை.

(மதனபள்ளி மறைத்திருவாளர் பண்டித அ. கோபாலையர் அவர்கள்.)

உலகத்திலுள்ள நாத்திகப்பத்திரிகைகளோடு போர்செய்து வெற்றிபெற்று வாகைசூடி வருகின்ற தனிவீரனாகிய சிவநேசன் பெருமையையும், அவன்பெருமைக் கேற்ப அவனையணிந்து பேணி வரும் தங்கள் முயற்சிக்கு நேர்ந்த இடுக்கண்களை யெல்லாம் இடுக்கட்படுத்தி ஊக்கமேற்கொண்டு உழைக்கும் தங்கள் பெருமையையும் உள்ளபடி வரைய எனக்குச் சொற்கள் கிடைக்காமையால், அச் சிவநேசனும் தாங்களும் நீடூழி வாழவேண்டி ஈசனை வாழ்த்துகின்றேன்.

(திருத்தென்குடித்திட்டை மறைத்திரு:மு.பாலசுப்பிரமணிய ஐயரவர்கள்.)

தங்கள் சிவநேசனைக் கண்டு களிக்கிறேன். உள்ளும்புறமும் ஒத்து அழகாய்க் காணப்படுகிறது. கொந்தளிப்புடைய அலைகடல் நடுவில் உயிர்க்கு மன்றாடும் ஓர் மாலுமிக்கு ஒருவிளக்குக் கூண்டின் வெளிச்சம் (Light House) தென்பட்ட மாத்திரத்தில் எப்படியும் கரை சேர்ந்துவிடலாம் என்கிற நம்பிக்கையும் மகிழ்ச்சியும் எவ்விதமுண்டாகுமோ அவ்விதமாகவே சிவநேசனைக் கண்டதும் இனித் தென்னாட்டில் தெய்வபக்தி குறைவுபடாமல் இருந்து வரும் என்கிற நம்பிக்கையும் மகிழ்ச்சியும் உண்டாகின்றன. நமது "சிவநேசன்" தமிழ்நாட்டிற்கு ஓர் திலகம்போல் விளங்க சர்வவல்லமை யுடைய சர்வேசுவரனைத் தினமும் தியானம் செய்து வருவோம்.

* * *

(யாழ்ப்பாணம் வண்கிழக்கு திருவாளர் சி. மு. சின்னத்தம்பி அவர்கள்.)

"சிவநேசன்" கார்த்திகைத் திங்கள் வெளியீட்டில் தாங்களும் கட்டுரையாளர்களும் எழுதியவற்றை நன்றாய்ப் பன்முறை வாசித்துப் பார்த்தேன். வைதீக சைவ வைணவ நன்மக்களின் அபிப்பிராயங்களைத் தழுவியிருப்பதோடு, 'வேதமோ டாகமம் மெய்யாமிறைவனூல்' என்பதை விளக்கி யெழுதியிருக்கும் பெருமையை யென் சொல்வேன்! முன்னர்ப் பாண்டிமாதேவியாரும், குலச்சிறை நாயனாரும், சைவத்தின் பெருமையைக் காப்பதற்குக் காரணரா யிருந்ததுபோல, தற்போது தாங்களும், குருவாயூர்த் தருமகருத்தர் ஸ்ரீலஸ்ரீ ஜாமொரின் அவர்களும் சிவபக்த சிரோமணிகளாயிருந்து, சைவத்தின் பெருமையைக் காப்பாற்றுவீர்களென்று தென்னாட்டிலும் ஈழநாட்டிலும் பல்லாயிரக்கணக்கானோர் நம்பியிருக்கிறார்கள் — இருப்பார்கள் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

* * *

(சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்த சபை, திருவாளர் நல். கண்ணப்ப முதலியார் அவர்கள்.)

"சிவநேசன்" கார்த்திகைத் திங்களில் வெளிவந்துள்ள 'திருக்கோயிலும் தீண்டாதாரும் என்னும் அரிய கட்டுரையைப் பெயர்த்துப் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சிட்டு, சென்னைக்கும் மற்றுமுள்ள இடங்களுக்கும் அனுப்புமாறு மன்றாடி வேண்டுகிறேன்.

---

உ

# திருக்கோயிலும் திருத்தொண்டரும்.

திருவாமாத்தூர்
கௌமார மடாலயம் திரு. தி. மு. செந்திநயகம் பிள்ளையவர்கள்.

நம்பியாரூர வள்ளலா லியற்றப்பட்ட திருத்தொண்டத் தொகைப் பதிகத்தி லமைந்துள்ள நாயன்மார்களனைவரும், திருக்கயிலாயகிரியிலிருந்து, சிவகருணை, ஈசுரபக்தி, பாசவைராக்கியம் முதலிய மார்க்கங்களைத் தங்கள் அநுபவமாக நடத்திக்காட்டும்பொருட்டு, பரமசிவாஞ்ஞையால் இவ்வுலகத்தி லவதரித்த சிவகணத் தலைவர்களாவர். நம்போற் பூருவவினைப் பிராரத்தத்தை அநுபவித்தொழிதற்கெனப் பிறந்தோரல்லர். அவர்களியற்றிய செயல்களனைத்தும் உலகியல் கடந்த அருஞ்செயல்களாம். தாமரையிலைமீது நீர்நிற்பது போல், உலகியலொழுக்கங்களிற் படிந்தாங்கு பாவனைகாட்டிய தன்றி, அவர்கள்மனம் சிவபெருமான் றிருவருளின்பாலதாகவே தாக்கிக் கலந்திருந்தது.

மனைவி மக்கள் சுற்றம் தம்முடல் பொருள் பெருமை முதலியவற்றைப்பற்றி நிற்கும் மனச்சேட்டை அவர்களைச் சிறிதும் பற்றியதின்று. அவர்கள் ஒரே குலத்தினரல்லர். ஒருகாலத்தவருமல்லர். ஓரிடத்தவருமல்லர். சிவகிருபையைப் பெற்றுச் செயல்களியற்றிச் சிவகதிபெற்ற தன்மையில் மாத்திரம் ஒத்தவர் என்பதே அறிஞர் கூற்று. அவ்வித நாயன்மார்கள் தேகாபிமானங்கடந்து, திருவருளியக்கத்திற்கு இலக்கா யியங்கினர். அவர்களை நம்போன்றவரென்றும், நாம் அவர்களைப்போன்றவர்களென்றும் விபரீதமாய்க்கருதி, தொன்றுதொட்டு ஆன்றோர்களாற் கையாண்டுவரப்பட்ட ஆசாரவொழுக்கங்களை வரம்பழிக்க முயலும் சில நூதனவிவேகிகளின் கூற்று நல்லோர்க்கு வியப்பும் வெறுப்பும் விளைக்குமன்றி, முற்றும் இனிது நிறைவேறுதற் குரியதாகாது.

1. திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனாரைச் சதாவும் முத்தமிழ்விரகர் உடனிணங்கக்கொண்டு பழகினரென்னும் பெரியபுராணக்கவியைக் கொண்டு பஞ்சம சகோதரர்களை உடனிணங்க வைத்துப் பழகுதல் வேண்டுமென்றும், ஆலயங்களினுள் அவர்களையும் நுழைவித்

துக்கொள்ளவேண்டுமென்றும், சொல்வதும் முயல்வதும், முறைதவறிய செயலன்றோ? அப் பாணநாயனார் தமது அன்பின் பெருக்கால் நாலவாசனாதோஷம் நீங்கி அருள்வசப்பட்டு நின்றதன்மையால், பாலறுவாயருட னிணங்கிய தென்பதை மறந்து அதன்படி ஏனையரை யமைக்கக் கருதிச் சிலர்காணும் கனவு விந்தையே.

திருநள்ளாற்றில் சம்பந்தப்பெருமான், ஆலயத்தினுட் சென்று பதிகம்பாடி வணங்கி வெளியே வந்தபின், பாணரை யாழில் இட்டுப் பாடும்படி சுவாமிகள் கூறிவினவி மகிழ்ந்தனரெனத் தெரிகின்றது. சுவாமிகள் தமது பரஞானத்தினால் அவரை யணுக்கமுறக் கொண்டதன்றித் தீண்டிக்கொண்டதாகவும், சமபந்தியமைய வுண்டதாகவுமில்லை. அவரது சிறப்பிலக்கணம் உலகசமஷ்டி நடைக்குப் பொருந்துவதன்று.

"யாணரம்பி லாரவிய விசைகூடப் பாடியே யெண்ணில் கற்பச்
சேணளவு படவோங்குந் திருக்கடைக்காப் புச்சாத்திச் செங்க ணேகப்
பூணகலத் தவர்பாதம் போற்றிசைத் துப் புறத்தணைந்து புவன மேத்தும்
பாணனார் யாழிலிடப் பாலறா வாயரருள் பணித்த போது"

என்பது திருஞானசம்பந்தர்புராணம்—457.

2. திருநாளைப்போவாரென்னும் நந்தனார் திருவருட்பெருமையாகிய விசேடம் பெற்றுத் திருப்புன்கூர்ச் சிவபிரான் நந்தி மறைத்திருந்த இடம் விலகிக்கொடுத்த பின்னும் தெரிசித்துக் கொண்டு ஆலய பதியின்புறத்தே வலம்புரிந்து பணிந்து சென்றாரென்றும், தில்லைத்தலத்திற்சென்று எல்லைவலம்புரிந்து மதிற்புறவாயிலிற் சென்று பன்னாள்பணிந்து வருந்தித் தவங்கிடந்தபின் நடராஜப்பெருமான் அந்தணர்களுக்கும் அவருக்கும் உத்தரவுசெய்தனர். அதன்படி தென்றிசைத் திருவாயிலில் வேதியர்களா லமைக்கப்பட்ட அக்கினி குண்டத்தில் முழுகிப் பழைய மாசுடம்புமாறி, பிரமதேவனை யொத்து ஒளிவீசும் மேனியும், ஜடைமுடியும், எக்ஞோபவீதமுங் கொண்டு எழுந்து வந்தனர். வேதியர்கள் குழுவுடன் சேர்ந்து கனகசபை யடைந்து சிற்சபா நாதரைத் தெரிசித்தவுடன் உருவங்கரந்து பரவெளியில் ஐக்கமுற்றனர், என்றும் பெரியபுராணம் கூறுகின்றது. வேதியர்வளர்த்த தீயினால் வெதும்பாத சரீரநிலை நந்தனருக்கு யோகசாதனத்தாலும் திருவருட் சார்பாலும் அமைந்திருந்த தெனப் புலனாகிறது.



"இன்னல்தரும் இழிபிறவி யிதுதடையென் றேதுயில்வார்
அந்தில்லை யம்பலத்து ளாடுவா ரறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முறுவலொடு மருள்செய்வார்.

இப்பிறவி போய்நீங்க எரியினிடை நீமூழ்கி
முப்புரிநூல் மார்பருடன் முன்னணைவா யென்னமொழிந்
தப்பரிசே தில்லைவா ழந்தணர்க்கு மெரியமைக்க
மெய்ப்பொருளா னாரருளி யம்பலத்தே மேவினார்.

கைதொழுது நடமாடுங் கழலுன்னி யழல்புக்கா
ரெய்தியவப் பொழுதின்க ணெரியின்க ணிம்மாயப்
பொய்தகையு முருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாய்
மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார்

தில்லைவா ழந்தணரு முடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
யொல்லைபோ யுள்புகுந்தா ருலகுய்ய நடமாடு
மெல்லையினைத் தலைப்பட்டா ரிருந்தவரைக் கண்டிலரால்."

(திருநாளைப் போவார்புராணம், 27–28–32–35)

3. திருப்பாணாழ்வார் சீரங்கத்துக் காவேரியின் தீர்த்தத் துறையருகு மணலிற் கோயில்வகுத்து, ஸ்ரீரங்கநாதனைப் பாவித்துப் பூசித் தாற்றமைகண்ட கோயிற்பணியாளர் அவரைப் பலவாறு தூடணித்துத் தூரத்திவிட்டுத் தீர்த்தமெடுத்துச் சந்நிதியடைய கதவு திறக்கமுடியாமல் வருந்தித்துதித்தலும், அசரீரியாய் "நமது பக்தனுக்குத் துன்பமிழைத்தீர்களாதலின் இத்துன்பத்துக் காளானீர்கள். அங்கு சென்று அவனை அர்ச்சகன் பிடரியிலேற்றி அழைத்துவருவீர்களாயின் நலமுறலாம்." என்று அருளக்கேட்டு, அவ்வாறழைத்துவந்த தருணம் கர்ப்பக்கிருகத்தின் கதவுகள் தாமே திறந்தன. பெருமாள்சேவை பெற்று ஆழ்வார் ஓர்பதிகம்பாடிப் பரந்தாமன் திருவடியிற் கலந்தனர் என்பது சரித்திரம்.

"நம்முரிமைத் தொழும்பனுக்கு நலிவுசெய்தீ ராதலினிவ்
விம்முதய ருறப்பெற்றீர் விரைந்தவனைத் தொழுதழைத்தின்
றம்முறைசெ யருச்சகன்மீ தேற்றிவரு வீரென்ன
வெம்முதல்பா ரங்கேசன் விளம்பொலியொன் றெழுந்ததுவே.

அவ்வண்ண மங்குள்ள அணிகிளர்சந் நிதிச்செல்காற்
செவ்வண்ணக் கதவங்கள் திறந்திடலாற் சேவித்தா
னுய்வண்ணப் பாணாழ்வா னொருபதுபாட் டுரைத்திடலும்
மைவண்ண மாலவனை வாய்மலரா லுட்கொண்டான்"
(புலவர் புராணம்)

அத்தகைப் பேராற்றலமைந்த திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனர், திருநாளைப்போவார் நாயனர், திருப்பாணாழ்வார் என்னும் பெரியார்களோடு, தற்காலம் உலகியலில் மயங்கித் தேகாபிமானங் கொண்டு, கொலை புலை கள் காமம் பொய் அழுக்காறு முதலிய தீச்செயல் கொண்டுள்ள கீழ்மக்களைச் சமப்படுத்தி நினைக்கவும் பேசவுந் துணிந்த மதிச்செயல் விதிச்செயல் என்பதன்றி வேறென் சொல்வது? திருநீலகண்டப் பெரும்பாணருக்கு மதுரைப்பரமன் பலகையிட்டு ஆதரித்ததும், திருநாளைப் போவாரை அக்கினியில் மூழ்குவித்து அழைத்து வரும்படி நடராஜர் கூறியதும், திருப்பாணாழ்வாரை அர்ச்சகர்மீதேற்றி வரும்படி ரங்கநாதன் உத்தரவு செய்ததும் ஆகிய அருளியக்கங்கள் சிறப்பிலக்கணங்களாம். அத்தகைய அருட்செயல்கள் வெளியாவதற்குமுன் அவர்களை ஒருவரும் ஆமோதித்ததில்லை. அவ்விதச் செயல்கள் கண்டபின்னும் அவ்வக் காலத்தும் குறிக்கப்பட்ட ஒவ்வொருவரன்றி, அவர்களினத்தார் ஒருவரையாவது உடன்சேர்த்து அழைத்து நுழைத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அங்ஙனமாக, இக்காலத்திற் சிலவிபரீதஞானிகள்காணும் கனவானது முற்றும் பலிதமுறும்படி (கலிபுருடனது ஆணைதொழிற்படும்படி) திருவருள் செய்யாதென்றே கொள்ள வேண்டும்.

"நாளைப் போவான் நறுந்தமிழ்ப் பாணன்
யாழ்வல் லான்முத லெண்ணில் பல்லோர்
ஐம்பாற் குலத்துதித் தருளடைந் தோரே" என்றும்,

கரும நூலோர் கழிப்பினும் பத்தித்
துணிவினர் பஞ்சமர் தொண்டிக மூரே.

கடுகளவு ஆனுங் காதலித் துண்ணான்
ஐந்தாங் குலத்தின னாயினு மவனைச்
சீரியர் தம்மொடு சேர்க்கத் தகுமே.



நால்வகைக் குலத்து நரர்க்குங் கீழ்ப்படிந்
தொழுகும் பஞ்சம னூறுளோ னலனே.

கொலைபுலை பொய்மை யாதிய கொடுந்தகை
நீத்தோ னொருவன் நீசக் குலத்தி
லுற்பவித் திடினும் அவைபுடை யோனும்
மற்றைக் குலத்தனில் மாண்புடை யோனே." என்றும்,

தமது சத்திய சூத்திரமென்னும் நூலில், சமதுணத்துடன் பொதுவில் தழுவிக் கூறிய மஹான் வண்ணச்சரபம்—ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகளே ஒரு சூத்திரத்தில்,

"புலைகொலை பொய்மை பொருந்தி நீசக்
குலத்திலும் பிறந்த கொடியோர் தம்மைக்
காண்டலு மாகா தென்பர்கற் றோரே"

என்று சிறப்பில் ஒதுக்கித் தள்ளினர்.

தற்காலம் உலகிலுள்ள பஞ்சமகுலத்தினரிற் பெருந்தொகையோர் உயிர்க்கொலை புரிவோராயும், மாமிசவுணவுடையோராயும், இருப்பதன்றி இறந்துபோன பசு, எருது, எருமைமுதலிய பிணங்களை உயர்ந்த உணவுப் பொருளாகக் கொண்டுண்கின்றனர். மேலும், காலக்கொடிதால் உயிர்ப்பசுக்களை வதைத்தும் தின்னத்துணிகின்றனர். அந்நிலைபினின்றும் அவர்களைச் சிறிதுசிறிதாக மாற்றி நாளடைவிற் சுத்தவுணவு, ஆசாரவொழுக்கமுடையவர்களாகும்படி செய்யவேண்டியதே முதல் விஷயம். அதன்பின்பு சற்சூத்திரர்கள்போல் அவர்களை மனத்துட்கொண்டு இழிவாக நிந்தித் தொதுக்காமல்; விவகாரங்களில் பொதுவாகத் தழுவி நடக்கவேண்டும். அவ்வளவன்றி ஆலயங்களின் உட் சென்று பணியுந் தகுதிக் குரியவர்களாக ஏற்றுக் கொள்வது பின்னரே யோசிக்கற்பாலதாம்.

ஆனால், ஏனை மேற்குலத்தோரென் றோதப்படுவோரிற் பலர் அத்தீத் தொழில்களின் வசப்பட்டுள்ளாரன்றோ? அவர்களெல்லாம் செல்லும் ஆலயங்களில் அவரோடு பெரும்பாலும் ஒத்துச் சிறிது வேறுபட்டுள்ள பஞ்சமர் சென்றாலென்னென்பர் ஒருசாரார். அவர் கூற்று முற்று மிகழ்தற்பாற் றன்றாயினும், முற்றும் ஏற்றுக் கொள்ளுந் தகுதியினதும் அன்றென்னலாம். ஏனெனில், அநாதிசிருட்டியில் எல்லாஆன்மாக்களும் ஒத்தவேயாயினும் நீண்ட

காலத்து அநுட்டானத் தொழிற்காரணத்தால் ஐந்துவகையாய்ப் பிரிக்கப்பட்டு அவ்வாறே யிதுகாறு மியங்குகின்றனர். அம்முறை யில் மேலவர்கீழ்நிலையும் கீழவர்மேல்நிலையும் ஏகதேசத்திலடைவது முண்டு. அது, அவ்வவ ரளவன்றிச் சமூகத்தைப் பாதியப் படுத்தா தென்பது திண்ணம்.

உற்று நோக்குமிடத்து, சென்ம சண்டாளரென்றும், கன்ம சண்டாளரென்றும் இருபிரிவின ருண்டென்பதும், அவருள் முன் னையவரினும் பின்னையவரே கொடியோரென்பதும் பொதுஅறிஞர் கூற்றாயினும், தூலவிவகார அளவிற் காரியப்படுவதற்கு நீண்ட காலத்துச் சென்மசண்டாளர்களைத் தக்கவுபாயங்களால் முற்றும் ஒழுங்குபடுத்தி ஆலயங்களுட் புகவிடுந் தகுதியும், கன்மசண்டாள ரைப் பிரித்தறிந்து விலக்கும் அதிகாரமும், சுயநலம் விரும்பாது பரமகருணையுட னியற்றும் பெருந்தவமுதிர்வினல் அருட்சித்தி கை வரப்பெற்ற மஹாபுருட னொருவனுக்கே யுரித்தாகுமன்றி, அபர ஞானத்துக் கேதுவான பன்னூற் பகுப்பிற் சின்னூல்களைச் சிறிது கற்றுத் தற்போத மூனப்பாற் பேசும் வாய்ப்பேச்சாலும், சிற் றறிவின் ஆராய்ச்சியாலும் நிறைவேற்ற எண்ணுவது துரும்புபற்றிக் கடல் கடக்குந் துணிவேபோல்வதாகும். நிற்க:

பெத்தான் சாம்பானென்னும் ஓர் பஞ்சமன், தன்மனைவியும் பின்றொடரத் தில்லைத் தலஞ்சென்று திருவீதி விளக்கிக் கோபுரத் தை வணங்கிப் பன்னாள் வழிபட்டிருந்தனனாக, சிவபிரான் அவ னெதிர் காக்ஷியளித்து வேட்கையாதென வினவியபோது, "ஈண் டு அயன் படையாப் பெருங்கதி யன்றி யாதும் வேட்டிலன்" என் றோதினன். உடனே,

"அடியார்க் கெளியவன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியாற் கெழுதியகைச் சீட்டு—படிமீதிற்
பெத்தான்சாம் பான்றனக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை"

என்னும் வெண்பாவைத் திருக்கரத்தால் ஏட்டில் வரைந்து கொடுத் து, அடுத்த கொற்றங்குடி மடத்திலுள்ள உமாபதிமுனிவரிடம் இதனை அளிக்கில் உனக்குமுத்தி அவரே தருவரென்றோதி மறைந் தனர். அவ்வாறே அவன்சென்று பலநாள்வரை புறத்தொண்டாற்றி



யிருந்து திருவருட்செயலால் பக்குவமமைந்தகாலத்தில் இறைவன் அவரதுமனத்தில்விளக்கலால், அடியவர் மூலமாய் வெளியில்நிற்கும் பெத்தானை யுள்ளழைத்துத் திருமுகச்சீட்டைப் பெற்றுணர்ந்து, அவனதுடல் அருட்சோதியிற் கலக்கும்படி சிறப்புநோக்கம் புரிந்து பரமுத்தியளித்தனர். அவனதுமனைவி விஷயமுணர்ந்து வருந்திச்சில ஞாயங்களாற் றேறிச் சிலகாலம் புறத்தொண்டாற்றிச் சுவர்க்கமுற் றன ளென்று ஆன்றோர் கூறுகின்றனர்.

"அவ்வுரை பெற்றூர் நிற்கவென் றன்பா
லறைந்துபோ யருண்முனிக் குரைத்தார்
இவ்வுழிக் கொணர்மி னெனக்குல முறைமுற்
றிகந்தழைத் தனனவ னேகிச்
செவ்வுருச் சிவனே யிவனெனக் கருதித்
தெண்டனிட் டளித்தனன் சீட்டை
யெவ்வுல கத்தார் பெற்றன ரிப்பே
றெனக்களித் திருகரத் தேந்தி;

கவுரிதன் வளைக்கை பற்றிய திருக்கைக்
கவினெழுத் துணர்ந்துகண் சாத்தி
மவுனயோ கியரும் பெறலரும் பேறு
வழங்குவான் றன்னெதிர் வைத்துத்
தவுதலி லுணர்ச்சி பெற்றவர் சிலருந்
தன்னரு கிருந்துபார்த் துவக்க
நவுமுத லெழுத்தோ ரைந்துளா னடியை
நாடியன் னவன்றலை தொட்டான்.

தொடுதலு மவன்ற னுடலொடிப் பொழுதிற்
சோதியாய் வெளியினிற் கலந்த
தடுதொழிற் கூற்றை யடர்கழற் பெருமா
னருட்டிற மாரறி கிற்பார்" (புலவர்புராணம்.)

இந்தச் சரிதமும் அறிஞர்கள் கவனிக்கத்தக்கது.

"சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங்கு லமுங்கொண் டென்செய்தீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே"

186922

என்னும் திருக்குறுந்தொகைச் செய்யுளைத் தமது விபரீதக் கொள்கைக்கிசைந்த மேற்கோளாகக் கொண்டு பொருள்கூறவுந் துணிகின்றனர். அக்கவி கூறிய வாகீசர் தமது அதீத ஞான விளக்கத்தாற் கண்டவுண்மையைப் பக்குவிகளுணர்ந்து அந்தரங்கத்திலநுட்டித்துப் பயன்பெறுதற்கேதுவாகக் கூறியதன்றி, உலகமுழுவதையு மொன்றாக்கி விடுவதற்காக வோதியதன்று. சாத்திரங்கள் பலவும், ஆன்மாக்களை மேல்நிலைக் கேற்றுவதற்கு அமைக்கப்பட்ட ஏணிபோல்வன வெனக் கண்டு தழுவி யநுட்டித்துத் தேருது அவற்றை முடிவாக எண்ணி வாய்ப்பறை சாற்றுபவர், கோத்திரங் குலங்களின் பேதத்தா லிறுமாந்து திரிவதுவீண்; சிவமொன்றே யுண்மைப் பொருளென்றுணர்ந்து பணிந்தால் அருள்பெறலாமென்னுங் குறிப்பானது, கருமம், பக்தி யிரண்டுந்தாண்டி ஞானமடைதற்குரிய பக்குவிகளைக் குறித்ததாம். அல்லாமல்,

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயரா
யாவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்குங் கடவு ளாரே"

என்னும் தாண்டகக் கவியில், திருநாவுக்கரசர் ஆதித்திராவிடர்களைப் புகழ்ந்துள்ளாரெனவுங் கூறுகின்றனர். "புலையரேனும்" என்ற இழிவும்மையாலும், "அன்பராகில்" என்ற எச்சத்தாலும், இன்மையையும் ஏகதேசத்தையும் விளக்கியதன்றி, உலகிலுள்ள கீழ்க்குலத்தோரனைவரையும் சிவாலய முதலிய பரிசுத்தத்தானங்களிற் புகுத்திக் கொள்ளவேண்டுமென்பதற்குப் போதியசான்றாகாதென்க.

"கங்கையிற் படிந்திட்டாலுங் கடவுளைப் பூசித்தாலும்
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கினாலும்
சங்கையில் லாத ஞான தத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால்பு சிப்போன் போய்நர கடைவ னன்றே"

என ஆன்றோர் கூறியிருப்பதால், ஆவுரித்துத் தின்போன் அன்பனாவதும், அவனை ஞானிகள் வணங்குவதும் முயற்கோடேயாம். ஆகவே, அப்பர்சுவாமிகள் தமது அன்பின் பெருக்கத்துக்கு ஓரெல்லை காட்டியவாறு [illegible] கொள்க.



ஐந்தாங்குலத்தாரென்ற பொருட்பெயர் கொண்ட பஞ்சமர்களுக்கு வழிபிறந்தால், அவரினும் பன்மடங்கு மேம்பட்ட வண்ணார் முதலானவர்களுக்கு அதன்முன்பே வழிபிறக்கக் கூடுமாதலின், திருக்குறிப்புத்தொண்டரை வேறெடுத்துக் கூறவேண்டியதில்லை. அப்படிப்பார்த்தாலும் அவர் உலகியல் கடந்த தலையன்பினால் அடியவர் வடிவத்தைப் பரசிவனுருவாகக் கொண்டு பணிந்து,

"மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே"

என்ற சிவஞான போதச் சூத்திரத்துக் கிலக்கியமா யிலங்கிய பெரியார். அவரிடம் சிவபிரான்செய்த திருவிளையாடல்களையும், அந்நாயனாரது அருஞ்செயல்களையும், திருவருட் செயலாலுணர்ந்த நம்பியாரூரவள்ளல் அவரைத்தமது பதிகத்திற் றுதித்ததாலும், ஆலயங்களில் அவரதுவடிவம் தாபித்துப்பூசிக்கப்படுவதாலும், ஊர்களில் அழுக்கெடுக்கும் ஏகாலிகளையும் உபசரித்துக் கருப்பக்கிரகம் வரை சென்றுபணிய விடவேண்டுமென்பது, நாகசர்ப்பத்தை நாக்குப் பூச்சிக்கு இனமென்றிணைத்துப் பேசுதல் போலும்.

"தேரொலிக்க மாவொலிக்கத் திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி
யூரொலிக்கும் பெருவண்ணா ரெனவொண்ணா வுண்மையினார்
நீரொலிக்க வராவிரைக்க நிலாமுகிழ்க்குந் திருமுடியார்
பேரொலிக்க வுருகுமவர்க் கேயொலிப்பர் பெருவிருப்பால்"
(பெரியபுராணம்)

உயர்குலத்தோரேனும் சமய விசேட தீக்கைகள்பெற்று அநுட்டான வொழுக்கநெறி செல்வோரே ஆலய வழிபாட்டினுக் குரியோரென்றும், அவ்வவர் தம்தம் அதிகாரத் தளவில் நின்று தெரிசிக்குந் தானங்கள் இவையிவை யென்றும், வகுக்கப்பட்டுள்ள ஆகம வசனங்களை யெல்லாம் புறக்கணித்து வரம்பழிக்க முயலுதல் தருமமன்று.

சமண் சமயம் புக்கு வாழ்ந்த தோடம் நீங்கப் பரமசிவனால் இடபசூல முத்திரையிட்டுத் திருநீறு பூசப்பெற்றதும், சமண மன்னனது வன்குணத்தா லமைத்த நீற்றறைவெப்பத்தால் கன்றுதலின்றி யொளிவீசிநின்ற பெருமையினதுமான திருமேனியுடைய திருநாவுக்கரசரைத் திங்களூர் அப்பூதியார் பணிந்து உடன்வைத்

தழுதுண்டமையை யெடுத்துக் கூறி, அப்பர் வேளாளரென்று சாதாரண உண்ணல், உடுத்தல், உறங்கல், பூசல், புணர்தல் முதலிய தேகாபிமானச் செய்கையினுழன்றுழியும் மனிதர்களுட் சிலருக்குப் பிரித்தோதும் இடுக்குறிப் பெயரைக் கொண்டு கூறத்துணிவோரது நிச்சயம் திருவருளை யறிதற்பாலதாம்.

முடிந்தது முடித்தலாகச் சுருங்கக்கூறில், நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையில், திருநாவுக்கரசர், திருநாளைப்போவார், திருக்குறிப்புத் தொண்டர், திருநீலகண்டப் பெரும்பாணர் முதலியோர்களைப் போற்றியது கொண்டும், திருப்பாணாழ்வாரை ரங்கநாதன் அருச்சகர் மீதேற்றித் தன்னருகழைத்தது கொண்டும், இக்காலத்திலுலகத்திலுள்ள அக்குலத்தோர்களை யெல்லாம் அவர்கள் போலெண்ணிப் போற்றுதற்கு அறிவுலகம் இசையாதென்பதே. இத்தகைய விபரீதச்செய்கையை யுலகமெங்கும் பரவச்செய்ய வேண்டி, ஒருபெருஞ்சபை கூட்டவேண்டுமென்றும், அதற்குப்பலர்பொருளுதவிபுரியவேண்டுமென்றும், பத்திரிகைவாயிலாக ஏற்கவும் சிலர் துணிந்துழைக்கும்படி தூண்டும் வினை மிகக்கொடிதே.

“உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையாய் வைக்கப் படும்.”

என்னும் தமிழ்வேதம் இங்கு சிந்திக்கவேண்டியதாகின்றது.

ஒருசரீரத்திற் கைகளுக்குப் பெருமையும், கால்களுக்குச்சிறுமையும், வலக்கரத்துக்கு மேன்மையும், இடக்கரத்துக்குக் கீழ்மையும் கொள்வது உண்மையியல்போ? பழக்கவாசனையோ? அஃதெங்ஙனமாயினுமாகுக. சரீரமுற்றும் நமக்குரியது தானே; எந்தப்பகுதியையேனும் சேதிக்க நாம் இசைவோமா? இசையோம். அவ்விதமிருக்க, ஒருபொருளை இடதுகையா லொருவன் கொடுத்தல் வாங்குதல் அதிருப்தியையும், வலக்கரத்தா லியற்றுவது திருப்தியையும் விளைக்கின்றது. கையாலியற்றும் செய்கையை யொருவனுக்குக் காலாலியற்றுதல் பெருங்குற்றமாகக் கருதப்படுதலும் கவனிக்க. அதுபோல், ஆசாரவொழுக்கமுடைய மேற்குலத்தோர் வலக்கரம் போல்வர்; ஏனையர் இடக்கரம் போல்வர். அநாசார நடையுடைய கீழ்க்குலத்தோர் அதோ அங்கங்களையும், ஏனையர் ஊர்த்துவ அங்கங்களையும் போல்வர்எனக் கொண்டமைவதே சால்பாம். ஒரு



தம்பதிகள் (ஸ்திரீயும் புருடனும் ) தனியிடத்திற் கலந்தின்புறுந் தருணத்தில், கால் கை, கீழ்மேல் என்ற பிரிவுகள் கருதப்படுதலின்றி அபேதமுற்றுச் சுகித்தலுண்மையேனும், அந்நிலை நேரும்வரை நாணம், அச்சம், அடக்கம் வழிபாடுகொண்டு நடப்பது முறையாம். அதுபோல, அகண்டாகார பரமஞானவிளக்கம் அநுபூதியில் வரப்பெற்ற மேலோர்கள் தவிர ஏனையராகிய சரியை கிரியை யோகமார்க்கங்களிற்பயலும் கருமகாண்ட பக்திகாண்ட பக்குவிகள், உலகியல் அருளியலிரண்டிலும், சாதிபேத சமயபேதங்களைத் தம்தம் தகுதிக்கேற்பக் கைக்கொண்டே யொழுகவேண்டும். அங்ஙனமுயன்று ஞான பக்குவத்தைக் கல்வியளவிலன்றி அநுபவத்திலடைந்தவனும், தான் அவைநழுவி மேல்நிலையிற் படிதல் வேண்டுமன்றி, உலகிலுள்ளோர்களுக் குரிய அவ்வரம்புகளை யழிக்க முயலுதல் திருவருளுக்குச் சம்மதமாயிராது. அக்கூற்று இனிது நிறைவேறுவதும் அரிதாம்.

“நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது.

---

## வேளாளர்க்கு ஓர் அறிவுறூஉ.

வடமொழியிலுள்ள இருக்குமுதலிய நான்கு வேதங்களையும், காமிக முதலிய இருபத்தெட்டுச் சிவாகமங்களையும், தமிழிலுள்ள பன்னிரண்டு திருமுறைகளையும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும், சிவஞானபோத மகாபாஷ்யத்தையும் சர்வப்பிரமாணமாக மதித்து அவற்றிற் கூறியவாறு ஒழுகவேண்டுமென்று விதிக்குஞ் சமயமே வைதிகசைவம். தமிழரல்லாத சைவர்கள் பரதகண்டமுழுமைக்கும் பொதுவாகிய வடமொழி வேத சிவாகமங்களை யாயினும் சைவசமய சர்வப் பிரமாணங்களென ஏற்றே தீரவேண்டும். இந்நாட்டிடைக் காணப்படுஞ் சிவாலயங்களெல்லாம் அந்த வைதிக சைவத்துக்கே சொந்தம். பூசை விழா முதலியவனைத்தும் அந்தப் பிரமாணங்களைத் தழுவித்தான் அந்நிலயங்களில் நடைபெறுகின்றன. தவறுகள் உளவேல் அவற்றை நீக்கவே வேண்டும். அவற்றைப் புகலாகக் காட்டிப் பிறதவறுகளையும் புகுத்தப்பார்ப்பது முழுமடமையாகும். நிற்க:

தீண்டப்படாதார்க்கு ஆலயப்பிரவேசம் வழங்கவேண்டுமென்று காந்தியென்பார் சிலகாலமாகப் பெருமுயற்சி செய்துவருகின்றார். அவர்கூறும் ஆலயம் என்பதிற் சிவாலயத்தையும் அடக்குவர் சில்லோர். காந்தியோ ஒருபகிரங்க அசைவர். சைவசமயப் பிரமாணநூல்களிவை யென்பதே அவருக்குத்தெரியாது. சிவதீக்ஷை, சிவசின்னதாரணம், சிவாலயசேவை, கடவுள் "சிவனெனு நாமந் தனக்கே யுரியவ"னெனக் கோடல், திரிபதார்த்தங்களும் அநாதிநித்யமென்னுந் தத்துவாங்கீகாரம் முதலிய வைதிக சைவசதாசாரங்களெல்லாம் அவரிடம் சுத்தசூன்யம். ஆகவே, அவர் சொல்வனவற்றை ஆராய்ச்சியின்றி அப்படியே ஏற்றுக்கோடல் சைவர்க்குச் சிறிதும் அடாது. சைவர் அவற்றை ஆராய்தலாவது, அவைதம் சமயப்பிரமாண நூல்களிற் காணப்படும் விதிகளை அநுசரித்தனவா எனக் காண்டலே. புத்தர், ஜினர், ஏசு, மகமது, விவேகானந்தர் முதலியவரும் மகாத்மாக்கள்தான். ஆயினும், அவர்களெல்லாம் அசைவரென்பதில் என்னசந்தேகம்? அப்படியே காந்தியும் மகாத்மாவாயினும் வைதிகசைவத்துக்குப் பிரமாண புருஷராகவே மாட்டார். தீண்டப்படாதார்க்குச் சிவாலயப்பிரவேசங் கொடுக்க வைதிக சைவப் பிரமாணநூல்கள் சம்மதிப்பதானால் மட்டும் சைவசமயிகள் ஆமோதிக்கலாம்.

இனித் தமிழ்நாடு சம்பந்தப்பட்டவரையில் சிவாலயங்களில் ஆலயப்பிரவேசக் கொள்கையைத் தடுப்பது வேளாளரின்கடமையாகும். சைவசமய வளர்ச்சியை அவர்தம் உயிரெனக் கொள்பவர். அவ்வுண்மை உலகறிந்ததொன்று. அதனைப் பின்வருஞ் செய்தியும் விளக்கும். தண்டமிழ்நாடு தவம்பல புரிந்து சின்னூறாண்டுகட்கு முன்னர் ஸ்ரீமத் சிவாக்ரயோகிகள் என்னுந் திருப்பெயர் தாங்கிய பெரியாரொருவரைப் பெற்றது. அவர் சாதியில் ஸ்மார்த்தப் பிராமணர். முன்னைநல் வினைப்பயன் முந்துறலால் அவருக்கு வைதிக சைவத்திற் பற்று உளதாயிற்று. அவர் சகல வேதாகமங்களையும் ஓதியுணர்ந்து ஸ்ரீசிவபிரானது திருவருள் வீழ்ச்சிக் கிலக்காகித் தவராஜர்போற்றும் சிவராஜயோகியாய்ப் பிரகாசித்தனர். அக்காலை அவர் வடமொழியினுந் தென்றமிழினுஞ் செய்த சைவநூலுரைகளுக்கு அளவில்லை. அம் மகாத்மாவால் சூரியனார்கோவில் என்னுந் தலத்தில் வைதிகசைவப் பெருமடமொன்று நிலையிடப்பட்டது. சூரியனார் கோவில் மடமென்று அது இன்று வழங்குகின்றது. ஸ்ரீமத் யோகிகள் தாம் பிராமணராயிருந்தும் தமக்குப்பின் அம்மடத்துப் பரம்பரை அதிபதிகளாக ஸ்மார்த்தரில் எவருமே வருமாறு எதுவுஞ் செய்திலர். வேளாள விழுக்குலத்தினரே அப்பட்டத்துக்குத் தக்காரென்பது அந்தஞானவானின் தீர்மானம். ஆகையால், அக்குலப் பெரியாரே அதில் வழிவழிச் சந்நிதிகளாக வருமாறு அவர் ஏற்பாடு செய்துபோந்தனர். அதன்படி அந்தமூல புருஷருக்குப் பின் அந்த ஆதீனத்துக்கு வேளாண்குலத்து விழுமியோரே பண்டார சந்நிதிகளாயிருந்து வருகின்றனர். ஸ்ரீமத் யோகிகள் இங்ஙனம் தமது சிவதர்மபாலனம் இடையூறின்றி நிகழ்ந்துவர வேளாளரையே அபேக்ஷித்தனர். அம்மட்டோ? திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், குன்றக்குடி, மதுரை முதலிய மற்றைய வைதிகசைவப் பெருமடங்களை ஸ்தாபித்தவர்களும், நாளிதுவரைப் பண்டார சந்நிதிகளாயிருந்து பரிபாலிப்பவர்களும் அம்முதுக்குலத்தினரே. பரசிவப்பிரபுவும் அவர்களது கலங்காத சைவாபிமானத்தைக் கண்டு களிகூர்ந்து போலும், சிவஞானபோதசூத்திரகர்த்தாவையும் சிவஞானபோத பாஷ்யகர்த்தாவையும் அந்நற்குடியிலே திருவவதரிக்குமாறு அருள் வைத்தார்.



இதனால், அசைவக் காந்தியின் அசைவக் கொள்கையாகிய ஆலயப் பிரவேசம் சைவாலயங்களில் தலைகாட்டாதவாறு தடுக்கும் பொறுப்பு வேளாளர்க்குச் சாமானியமன்று என்பது உறுதியாயிற்று. ஆனால், அந்த அவைதிகக் கொள்கையைக் கண்டித்து ஒரு கூட்டமாவது பிரசங்கமாவது அவர்கள் இதுகாறும் நிகழ்த்தியதில்லை. குலத்தின் தூய்மையும், அறிவின்மேன்மையும், ஆசாரத்தின் நேர்மையும், பொறுப்பின் அழுத்தமும் ஒருங்குடைய அவர்கள் இனியாயினும் அப்பராமுகத்தை ஒழித்திடுக. சைவசபை, சித்தாந்தசமாஜம் எனப் பல பெயர்களை வைத்துக் கூட்டங்களைக் கூட்டி அறுதலிமணத்தை அவாவியும், காதல் மணத்தைக் காமுற்றும் பேசினால், அறுதலிகளும் காதலிகளுமே மெச்சுவார்கள். மானக்கேடுதான் கைகண்டபலன்.

சைவன்.

உ

# சிவபெருமானே உண்மை முத்தியைக் கொடுப்பவர்.

அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள்.

சிவபெருமானுடைய திருவருளைப் பெறாது முத்தி யடைந்தவர்கள் இல்லை; அவருடைய அருளின்றி வாழும் தேவர்களும் பிறரும் இல்லை; அவருடைய திருவருளைப் பெற்றால் அடைதற்கரிய அரும்பொருள்கள் ஒன்றும் இல்லை; அவரன்றிப் பதிப்பொருளுமில்லை. இது சத்தியம். ஆதலால், அக் கடவுளுடைய திருவடிகளையே நாம் சரணென்று அடையவேண்டும்.

அவனருள் பெறாது முத்தி யடைந்தன ரில்லை யல்லா
லவனரு ளின்றி வாழு மமரரும் யாரு மில்லை
யவனரு ளெய்தி னெய்தா வரும்பொரு ளில்லை யானை
யவனல திறைவ னில்லை யவனைநீ யடைதி யென்றான்.

(கந்தபுராணம்—உபதேசப் படலம்—௬௨.)

பிரமா முதலாகநின்ற தேவர்களையெல்லாம் நீக்கி, அந்தச் சிவனென்றுள்ள ஒரு தனி முதல்வன்றானே முத்தியை விரும்பினோற் கொடுப்பனென்று வேதம் சொல்லிற்றெனில், மற்று யாவர்தாம் தேவராவர்; வேதம் என்றது அதர்வசிகையை என்க. அது "மற்றெல்லாம் விடுத்து, இன்பஞ் செய்பவராகிய சிவபெருமான் ஒருவரே தியானிக்கற்பாலர்." என்பது.

அன்றியு மொன்று கேண்மோ வம்புய னாதி யாகி
நின்றவர் தம்மை யெல்லா நீக்கியச் சிவனென் றுள்ள
வொன்றொரு முதல்வன் றானே யுய்த்திடு முத்தி வேண்டி
னென்றுமஃ தியம்பிற் றென்னின் யாவரே தேவ ராவார்.

(உபதேசப் படலம்—௨௪.)

சிவஞான மில்லாது பிறவித் துயர் நீங்கி, வீடுபே றடைதுமெனல், உருவமில்லாத ஆகாயத்தின் றோலை யுரித்து உடுப்பதற்கு நிகராகும். எல்லாப் பேற்றையுங் கெடுக்க வல்லனவாகிய எத்துணைத் தீமைகளும், சிவஞானத்தாற் பெறப்படும் பெரும்பேற்றைக் கெடுக்கவல்லன அன்று.



பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும்
விரவிய துயர்க்கீ றெய்தி வீடுபே றடைது மென்ற
லுருவமில் விசும்பிற் றோலை யுரித்துடுப் பதற்கொப் பென்றே
பெருமறை யியம்பிற் றென்னிற் பின்னுமோர்சான் றுமுண்டோ

(உபதேசப் படலம்—௨௫.)

பெருமறை என்றது சுவேதாசுவதரசாகையை என்க. சுவேதாசுவதர சுருதியில், "ஒருவன் ஆகாயத்தை ஆடையாக்கிக் கொள்ளுமாயின், சிவனை யுபாசியாது துக்கத்தின் நீங்கி வீட்டினைத்தலைப்படுவன்." எனக் கூறப்படுவது காண்க.

இவ் வுபநிடதப் பொருளைச் சிவஞான சுவாமிகளும்,

வளிதாழ் விசும்பைப் பசுந்தோலிற் சுருட்ட வல்லோ
ருளரேற்புடை வீங்கி யெழுந்து திரண்டு ருண்ட
விளவெம்முலை பங்கனை யன்றியு மின்ப முத்தி
யுளவிற் பெறலா மெனவிண்ட ததர்வ வேதம்.

(காஞ்சிப்புராணம்-வைரவீசப் படலம் செய்யுள்—௧௨.)

என்றருளிச்செய்தமை காண்க. அருவமாகிய ஆகாசத்தை ஆடையாக்கிக் கொள்ளுதல் ஓர்காலும் ஒருவனாலும் முடியாமைபோல, சிவஞானமில்லாது வீடுபே றடைதலும் முடியாதென்க.

சிலர் பிரமனையும் சிலர் விட்டுணுவையும் சிலர் ஏனைத் தேவர்களையும் உபாசிப்பர். அவ் வுபாசனைகள் உலகத்திற் பயன்றருவனவன்றி வீடுபேற்றினைத் தராவாம். வீடுபேற்றின்பொருட்டுச் சிவபிரானையே உபாசிக்க. உடைந்த மரக்கலம் பிறிதொரு மரக்கலத்தைக் கரையடைவிக்க மாட்டாது. அதுபோலப் பிறந்திறந் துழலுந் தேவர்கள் அவ்வா றுழலும் எம்மனோர்க்குச் சரணாக மாட்டார். முயலிற் கோடும், ஆகாயத்திற் பூவும், கானலி னீரும், மலடிமாட்டு மகப்பேறு முளவாயின், ஏனைத் தேவரை உபாசனை செய்தலால் மோக்ஷந் தலைப்படும் என்க. இதற்குப் பிரமாணம்:—சதுர்வேததாற்பரிய சங்கிரகம்-௧௪௨, ௧௪௩, ௧௪௪ம் சுலோகங்கள்.

தங்கள் தொல்பவ மகன்றிலா விண்ணவர் தம்மைத்
துங்க முத்தியின் பொருட்டினு லடைபவர் தொகைபோ
லங்க ணொந்துதம் போலவே வெப்பமுற் றயருங்
கங்க நாடியே நீழலுக் கடைவன கலைகள்.

(கந்தபுராணம், சூரம்புகுபடலம் ௰-வது செய்யுள்.)

வேத மேமுதல் யாவையு முணர்கினு மேலா
மாதி வானவன் கறைமிடற் றிறையென வறியாப்
பேதை மாக்கட முணர்வென வலைந்துபோ கின்ற
சீத நீரெலாந் தெளிதலின் றுயது சிறிதும்.

(கந்தபுராணம் ஆற்றுப்படலம்—செ—உரு)

மார்க்கண்டேய முனிவர் முதலிய மெய்யடியார்கள் மரணத்தை யொழிக்கும்பொருட்டுச் சிவனையே பூசித்தார்க ளாகையால், பிறப்பிறப்பு முதலிய உயிர்க்குணங்கள் ஒன்றுஞ் சாரப்பெறாத "சிவபெருமானாகிய பரப்பிரமமே, மோக்ஷகாமிகளால் அறியற்பாலதுந் தியானிக்கற்பாலதுமாம்."

(சிவாத்துவித சைவ பாடியம். க—க—ச)

## சட்டம்.

மக்கள் விரும்புவது சுகம். அதனை அடைதற்குச் சில ஒழுங்குகள் அவசியம். ஒழுங்காவது விதி. விதியைச் சட்டமென்பது இழிவழக்கு. சட்டம் இருவகை. ஒன்று தெய்வச்சட்டம். மற்றொன்று மனிதச்சட்டம். சிவபூசை செய்க என்பது முன்னையது. தெருவிற் சிறுநீர் விடாதே என்பது பின்னையது. தெய்வச்சட்டத்தை மாற்றியமைக்க எந்தமனிதக்கூட்டத்துக்கும் அதிகாரமில்லை. ஆஸ்திகர் அதற்கு அடங்கியே தீரவேண்டும். திருநீறணிதற்குஞ் சிவபூசையாற்றற்குங் கூசுங்கூட்டம் சைவசமயத்தை விட்டு விலகுவதுதான் முறை. மனிதச் சட்டத்தை மாற்றியமைக்கத் தனிமனிதன் எவனும் அதிகாரியாகான். அவனுக்கு ஒருசட்டம் பிடியாமலிருக்கலாம். அப்போது அவன் மனிதக்கூட்டத்தை முதன்முதல் தன் கருத்துக் கிணக்கவேண்டும். அக்கூட்டம் அச்சட்டத்தை வேண்டியபடி மாற்றியமைக்கும். மனுமுதலியோரது சட்டமும், அவரிராசாங்கம் அங்கீகரித்த பின்னரேமதிப்படையலாயிற்று. ஆகவே, சட்டத்தை அமைக்கும் வினைமுதல் இரண்டு. ஒன்று கடவுள். இன்னொன்று ராஜாங்கம், சமுதாயம் முதலிய மனிதக்கூட்டம். தனிப்பட்ட மனிதனோ எவ்வகைச் சட்டத்துக்கும் அடங்கவே உரியன். எதனையாவது மீறுவானாயின் அவன் ஒரு முருட்டு மிருகம்.

சைவன்.

உ

# கலிகால வரலாறு.

யுகங்களில் நாலாவதாகிய இக்கலியுகம் 432000 வருடங்களையுடையது. அவற்றுள் இதுகாறும் 5033 வருடங்கள் சென்றிருக்கின்றன. இப்போது நிகழும் ஆங்கீரச வருடம் 5034 ஆவதாம். இற்றைக்கு 35 வருஷங்களுக்குமுன்னே, கலியுக மகிமையைப் பற்றிப் பாகவதபுராணத்திற் கூறப்பட்டிருப்பதை நான் பார்த்தபொழுது, இப்படியும் காலம் மாறுமா என்ற ஆச்சரியம் எனக்குண்டாயிற்று. ஆனால், அச்சமயம் இருந்த பெரியோர்களிற் சிலர் 5000 வருடம் ஆனவுடனே ஒரு புரட்சியுண்டாகும் என்று எனக்குச் சொன்னார்கள். அது இப்பொழுது நமக்குக் கண்கூடாகத் தெரிகிறது. ஆதலால், முதலில் கலிகால வரலாற்றைச் சுருக்கிக் கூறி, பின்னர்ப் புரட்சிவிவரமும் கூறுவேன்.

கலியுகத்தின் ஆரம்பத்திலிருந்து 4400 வருஷம் நமது நாடு தமிழ்மூவேந்தரால் ஆளப்பட்டுவந்தது. சில குறுநில மன்னர்களும் வள்ளல்களும், பெரும்பாலும் அம்மூவேந்தரோ டுறவு கொண்டு வாழ்ந்துவந்தனர். 4400 க்கு இப்பால், தமிழ்மூவேந்தரின் வம்சம் அற்றுப்போனதனால் இத்தேசத்திலிருந்த குறுநில மன்னர்களும், வடநாட்டிலிருந்து வந்த வேறு சிலருமாகச் சற்றேறக்குறைய 200 வருடகாலம் (அதாவது கலி 4600 வரை) ஆண்டனர். அப்பால் மகம்மதியர்கள் படையெடுத்து வந்து, தங்கள் ஆதிக்கியத்தைச் செலுத்தி 200 வருடகாலம் ஆண்டனர். எனினும், அவ்விருநூறு வருடங்களிலும் இங்கிருந்த வீரர்கள் இடையிடையே மகம்மதியருடன் சண்டையிட்டுவந்தனர். அச்சமயம், ஐரோப்பாக் கண்டத்திலிருந்து வியாபாரத்திற்காக இங்கே வந்து குடியேறியிருந்த சிலசாதியார், இத்தேசத்தின் வளத்தையும் இங்கேநிகழும் சண்டைகளையுங்கண்டு தாங்கள் சுலபமாக இத்தேசத்தைக் கைப்பற்றி யாளலாமென்று நினைத்தனர். அவர்களுள், ஆங்கிலேயர் படைவலி, இராசதந்திரம் முதலியவற்றிற் சிறந்திருந்ததனால், அவர்கள் மெல்ல நுழைந்து மகம்மதியர்களையும் இத்தேசத்து வீரர்களையும் கொஞ்சங்கொஞ்சமாக அடக்கித் தேசத்தைத் தங்கள்வசமாக்கிக் கொண்டனர். இப்படி யவர்கள் கைக்கொள்வதற்கு, ஒரு நூறு வருடங்கள்

சென்றன. எனவே, சற்றேறக்குறையக் கலி 4900 ம் வருடத்தி லிருந்து ஆங்கிலேயர் ஆளத் தொடங்கினர் என்னலாம். அதுமுதல் இதுவரையிலும், அவர்களின் ஆட்சிக்கே உட்பட்டிருக்கின்றது.

ஆதியில், தமிழ்வேந்தரின் ஆட்சிக்கு ஆதாரமாயிருந்தவை, மனுநீதியும் வேறுசில சாத்திரங்களுமாம். இவற்றை யெல்லாம் முற்றக் கற்ற பெரியார் பலரையுங் கலந்து கொண்டு அரசன் கண்ணுங் கருத்துமாயிருந்து செங்கோல் செலுத்துவது வழக்கம். ஒவ்வோரரசனும், குடிகளின் உயிரையும் பசுக்களின் உயிரையுந் தன்னுயிர்போல நினைத்துப் காப்பான். இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்குமுன் னிருந்த 'மோசிகீரனார்' என்னும் புலவர் பெருமான், ஓரரசனைப் பார்த்து,

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"

என்று கூறியிருக்கிறார். (புறநானூறு 186 ம் பாட்டு)

பசுக்களின் உயிர்களுக்குத் தங்களை யறியாமலுந் தீங்குவராலாகாது என்னுங் கொள்கையை அக்காலத்தரசர் மேற்கொண்டு காத்தனர் என்னுஞ்செய்தியைப் புறநானூற்றின் 9 ம்பாட்டு நமக்குத் தெரிவிக்கின்றது. மேலும், அவர்கள் தங்கள் குடிகளின் சாதியாசாரங்கள் சிறிதும் வழுவாவண்ணம் பாதுகாத்து, அப்படி யாரேனும் சிலர் வழுவினால் அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தி ஆண்டுவந்தனர். அக்காலத்து அரசரின் வெற்றிக்குப் பிரதான காரணமாயிருந்தது, அவர்களின் செங்கோலே. வேல் முதலிய ஆயுதங்கள் துணைக்காரணமாம். 'வேலன்று வென்றி தருவது மன்னவன், கோலதூஉங் கோடா தெனின்' (திருக்குறள்—546) என்பது உத்தரவேதவாக்கியம். "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர், காவலன் காவா னெனின்." என்னுந் திருக்குறளும், அதன் உரைகளும் அரசன் கோல் கோடுதலினாகும் தீங்குகளை அழகாக நிரூபிக்கின்றன.

இனி, அரசனையன்றிக் குடிகளும் தத்தம் சாதியாசாரங்களை உயிரினும் மேலானதாக எண்ணிப் பாதுகாத்து வந்தனர். அவ்வாசாரங்களிலே சிறிதும் வழுவாது ஒழுகினவர், தங்கள் சாதியினர்க்



குள்ளே உயர்ந்த குடும்பத்தவராகக் கருதப்படுவர். (தொண்டைமண்டலவேளாளர், கார்காத்தார் என்பன இதற்குதாரணமாம்.) சாதியொழுக்கந் தவறினவரோ, கருமசண்டாளர் எனப்படுவர். இவற்றை "ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம், உயிரினும் ஓம்பப் படும்" 131, 'ஒழுக்கமுடைமை குடிமை யிழுக்கம், இழிந்த பிறப்பாய் விடும்" 133, என்னுங் குறள்களாலும் பிறவற்றாலும் அறியலாம். மேலும், அக்காலத்துக் குடிகள் தங்கள் அரசனைப் பிரத்தியட்ச தெய்வமாக எண்ணிப் பாராட்டி மேன்மை யுற்றனர்.

மேலே கூறிய முறைகள் தமிழ்மூவேந்தரின் ஆட்சிகால முழுவதும் நிகழ்ந்தன. (கலி 4400 வரை) எங்கேனும் ஓரரசன் ஒருகாலத்தில் திடீரென்று இறந்துபோய்விட, இளவரசன் ஊரிலின்றி வெகுதூரம் போயிருந்தமையால் வந்துசேரத் தாமதப்படின், அக்காலத்திலே நாடு குழம்பும். அப்பால் இளவரசன் வந்துசேர்ந்து இராச்சியத்தை யொப்புக்கொண்டு குழப்பத்தையடக்கிச் செங்கோல் செலுத்துவான். இங்ஙனமாக, இற்றைக்கு 860 வருடங்களுக்கு முன்னே சோழநாட்டில் நேர்ந்த ஒரு சம்பவத்தைப் பற்றி அக்காலத்திருந்த கவியரசராகிய சயங்கொண்டார் என்பவர், தாம் பாடிய கலிங்கத்துப்பரணியிலே அழகாகக் கூறியிருக்கிறார்: அது:— "கங்கைகொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டையாண்டுவந்த வீரராஜேந்திரன் என்பவன், ஒருசமயத்தில் திடீரென்று இறந்துபோய்விட, அச்சமயம் இளவரசனாகிய குலோத்துங்கன் என்பவன் அவ்வரசனுடைய ஏவலால் தண்டெடுத்து வடக்கே வெகுதூரம் சென்று மத்திய மாகாணத்திலுள்ள வயிராகரம், சக்கரக்கோட்டம் முதலிய இடங்களிலிருந்த பகைவர்களை வென்றுகொண்டிருந்தமையால், அவன் அரசனிறந்தமை யறிந்து திரும்பிவந்து இராச்சியம் ஒப்புக்கொள்ளும் வரையிலும்,

மறையவர் வேள்வி குன்றி மனுநெறி யனைத்தும் மாறித்
துறைகளோர் ஆறும் மாறிச் சுருதியும் முழக்கம் ஓய்ந்தே.
சாதிகள் ஒன்றோ டொன்று தலைதடு மாறி யாரும்
ஓதிய நெறியில் நில்லா தொழுக்கமும் மறந்து போயே.
ஒருவரை யொருவர் கைம்மிக் கும்பர்தங் கோயில் சாம்பி
அரிவையர் கற்புச் சோம்பி அரண்களும் அழிய ஆங்கே.

(கலிங்கத்துப் பரணி—தாழிசை 245—247)

கலியிருள் பரந்தது. அதற்குள்ளே குலோத்துங்கன் வந்து சேர்ந்து குழப்பத்தையடக்கிச் சீர்படுத்தினான் என்பதாம். ஒரு அரசனது நேர்பார்வையில்லாத ஒரு நாடு சில மாதங்களுக்குள்ளே இவ்வளவு பாடுபடுமென்றால், கலியின் மகிமையினாலே சில நூற்றாண்டுகளாக வேறு தேசத்தினரும், வேறு மதத்தினரும் ஆகிய அரசர்களின்கைப்பட்டு அவர்களுடைய நேர்பார்வையுமின்றிச் சீரழிகின்ற நம்தேசத்தின் நிலைமையை என்னென்றெடுத்துரைப்பது! அதுநிற்க:

மேற்கூறியவாறு நடந்த தமிழ்மூவேந்தரின் ஆட்சி, கலி 4400 க்கு இப்பால் முடிவடைந்து விட்டது. அப்பால், முன்னே அவர்களின் கீழிருந்த குறுநில மன்னர்களும், வடக்கேயிருந்துவந்த சிலருமாகப் போட்டிபோட்டுக் கொண்டு, அங்கங்கே தங்களுக்குக் கிடைத்த நிலங்களைத் துண்டுதுண்டாகக் கைக்கொண்டு கலி –4600 வரையில் ஆண்டனர். இவர்கள்காலத்திலும் முன்போலவே சாதி சமயாசாரங்கள் காப்பாற்றப்பட்டன. விவாகமுறையும், ஸ்திரீகளின் கற்பும் சிறந்து விளங்கின. இவற்றில் தவறுதல் நேர்ந்து குழந்தைகள் பிறந்தால், அவர்கள் நாற்சாதியினுந் தாழ்ந்த பஞ்சமர் என்று அழைக்கப்பட்டுத் தனியே ஒதுக்கப்பட்டனர். ஸ்திரீகளின் கற்புக்குப் பங்கம் வந்தால், நமது தேசமே நாசமடையுமென்பது நமது சாத்திரங்களின் கருத்து.

மேலே கூறிய கலி–4600 க்குப் பிறகு, வடக்கேயிருந்து படையெடுத்து வந்து கொண்டிருந்த மகம்மதியர் நமதுநாட்டிலேயும் நுழைந்தனர். அதனால், ஆதிமுதல் அதுவரையில் நமது தேசத்தின் செழிப்புக்குப் பிரதான காரணமாய்ப் பாதுகாக்கப்பட்டுவந்த பசுக்களின் உயிருக்கும், ஸ்திரீகளின் கற்புக்கும், கோவில்களுக்கும் கேடுநேர்ந்தன. தேசமெங்கும் குழப்பம் உண்டாயிற்று. இப்படியாக மகமதியர் தங்கள் ஆதிக்கியத்தை 200 வருஷ காலம் செலுத்தினார்கள். எனினும், இத்தேசத்தவர் அவர்களுக்கு முழுதும் விட்டுக் கொடுத்துவிடவில்லை. எப்பொழுதும் சண்டைசச்சரவுகள் நடந்துகொண்டேயிருந்தன. அச்சமயத்தில், ஐரோப்பாக் கண்டத்திலிருந்து வியாபாரத்திற்காக இவ்விடம் வந்து கடற்கரையோரங்களிலே தங்கின வெளிநாடியார், இத்தேசத்தைக் கட்டியாள நினைத்தனர். அவர்கள் யாவரும் கிறித்துவ மதத்தினர். அவர்களில் ஒவ்வொருவரும் இத்தேசத்தைப் பிடிக்க முயன்றனராயினும், கடைசியாக ஆங்கிலேயர் எல்லாரினும் முந்தினர். அவர்கள் நாளாவர்த்தியில் தங்கள் ராஜதந்திரங்களையும் படைகளையும் கொண்டு நாட்டினுள்ளே நுழைந்து அங்கங்கே சண்டையிட்டுக்கொண்டிருந்த சுதேசிகளையும், மகம்மதியர்களையும் கொஞ்சங்கொஞ்சமாக அடக்கிப் பெரும்பாலும் இத்தேச முழுவதையும் வைவசப்படுத்திக்கொண்டனர். இதற்கு ஒரு நூறுவருடகாலம் சென்றது. இப்படியாகக் கலியில் 4900 ஆண்டுகள் கழிந்தன.



ஆங்கிலேயர் இத்தேசத்தைக் கட்டியாளத் தொடங்கினபிறகு, தேசத்திலே சொத்துச் சுதந்தரங்களுக்குப் பயமின்மையால் சமாதானம் ஏற்பட்டது. அவர்கள் தங்கள் மதத்தைப் பரவச்செய்தலிற் கருத்துடையராயினும், மகம்மதியர்களைப்போலக் கட்டாயப் படுத்திச் சாதி சமயாசாரங்களைக் கெடுக்காமல் அவரவராசாரங்களை அவரவர் அனுஷ்டித்துக் கொள்ளும்படி விட்டுவிட்டனர். அதனால், இத் தேசத்திலுள்ள கோவில்களும், தருமஸ்தாபனங்களும் காப்பாற்றப்பட்டன.

இப்படியாக ஆங்கிலேயர் தங்கள் ஆட்சியை நிலைநிறுத்திக் கொஞ்சங் கொஞ்சமாகத் தங்கள் பாஷையை வளர்க்கத் தொடங்கினர். அது, படிப்படியாக வளர்ந்து 100 வருஷத்தில் இத்தேச முழுவதும் வியாபித்துவிட்டது. சனங்களுக்கு அப் பாஷையிலே ஆர்வம் அதிகமாய்விட்டதனால், அதனையே கற்கத் தொடங்கித் தங்கள் சாதி சமய ஆசாரங்களுக்கான கல்வியை அசட்டைசெய்துவிட்டனர். அதிலிருந்து, சாதி சமய ஆசாரங்கள் வழுவ ஆரம்பித்தன; மாதர்களின் கற்புக் குறையத் தொடங்கிற்று; பசுக்களும் காப்பாற்றப்படவில்லை. இவ்வளவு குறைகளும் நகரங்களில் ஏற்பட்டனவாயினும், கிராமாந்தரங்களிலே பழைய வாசனையினால் சாதி சமயாசாரங்கள் கெட்டுவிடாமல் ஒருவாறு அனுஷ்டிக்கப்பட்டுவந்தன. அங்கே சாதிச் சண்டை சமயச் சண்டை முதலியன இல்லை. அங்குள்ளவர்கள் தங்கள் தங்களுக் குரிய கோயில்களுக்கும் போய்த் தொழுது வழிபட்டு, ஊர்ப் பொதுக் காரியங்களை யெல்லோரும் ஒன்றுகூடிச் செய்துகொண்டு வாழ்ந்தனர்; இன்றும் வாழ்கின்றனர். இது இப்படியிருக்க:

இற்றைக்கு 34 வருடங்களுக்கு முன்னே—அதாவது கலி 5000 பூர்த்தியாகப் போகும் சமயத்தில், ஆங்கிலபாஷா பிரவீணர்களாய் மேல்நாட்டு நாகரிகத்தை மேற்கொண்டு அந் நாடுகளுக்குப் போய்ப் பார்த்துவந்த சிலருக்கு, இவ் வாங்கிலேய ராட்சியில் நம் தேசத்துப் பொருள் சுறண்டப் படுதலால் நம் தேசம் வறுமையடைகின்றது என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனால், அவர்கள், இங்கிருந்த மேதாவிகளையும் தேசாபிமானிகளையும் சேர்த்துக்கொண்டு காங்கிரஸ் மகாசபை ஏற்படுத்தி, அதன்மூலமும் பத்திரிகைகளின்மூலமும் தங்கள் தேச ஆட்சியைத் தங்களிடம் ஒப்பிக்கும்படி கேட்கத் தொடங்கினர். இவர்களுக்கெல்லாம் சகவாச தோஷத்தால் இகத்திற்குரிய செல்வம் மாத்திரம் பொருளாகத் தோன்றி, பரத்திற்குரிய கல்வியும், ஒழுக்கமும், புண்ணியமும் பொருளாகத் தோன்றாமற் போயிற்று.

இவர்கள் கேட்கத் தொடங்கினமாத்திரத்தில் ஆங்கிலேயர், சில பதவிகளையும் நகரசபை யாட்சி முதலியவற்றையும் சட்டசபைகளிலே சில உரிமைகளையும் இவர்களிடம் கொடுத்து; இவற்றை நீங்கள் சரிவரக்கொண்டு செலுத்திப் பிறகு எல்லோரும் சேர்ந்து எங்களைக் கேட்டால், உங்கள் தேசத்தை உங்களிடம் கொடுத்துவிடுவோம் என்றனர். இதற்குள் கலி ஐயாயிரமும் பூர்த்தியாகி மேலே சென்றுகொண்டிருந்தது; நம்மவரும் ஒற்றுமைப்படுதற்கு வழிதேடலாயினர். அவ் வழி ஒன்றாயிராமல் பலவாகப் பிரிந்து, ஜஸ்டிஸ் கட்சி, ஸ்வராஜ்யக் கட்சி முதலியவற்றை யுண்டாக்கிச் சாதிச்சண்டைகளையும் உட்கலகங்களையும் உண்டுபண்ணி விட்டது. மேலும் இவர்களுக்குக் கிடைத்த அதிகாரங்களின் பலனாக நம்முடைய பாரமார்த்திகக் கொள்கைக்கே உலை வைக்கத்தக்க பிரௌடாவிவாகம், விதவா விவாகம், கலப்பு மணம், புனர் விவாகம், ஆகாராதிகளில் வரம்பின்மை முதலியன ஏற்பட்டன. இதுகாறும் கைகண்ட பலன் இவ்வளவே. சாதி வேற்றுமை ஒழியவேண்டு மென்பது இவர்களின் கொள்கை. ஆனால், உலகத்திலுள்ளவர்களோ தங்களைப் பிராமணர்களாகவும், க்ஷத்திரியர்களாகவும் ஆக்கிப் பட்டஞ் சூட்டிக்கொள்ள முயலுகின்றனர். அதனோடு, "வைசியமித்திரன்" "குலாலமித்திரன்" என்பன போன்ற சாதிப் பெயர், குடிப் பெயர்களைப் பூண்ட பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின.



இங்ஙனம், அரசாட்சியுங் கிட்டாமல், ஜனங்களும் ஒன்றுசேராமற் போகவே, சட்டமறுப்பு இயக்கம் என்ற ஒன்றை யேற்படுத்தி, இத் தேச முழுவதையும் அதிற் சேர்த்துக் கட்டாயப்படுத்தினால், ஸ்வராஜ்யம் சித்திக்கும் என்ற யுக்தி ஒரு பெரியாருக்குத் தோன்றி, அதன்படி செய்யத் தொடங்கினர். அதிலிருந்து மகாநாடுகள் பல தோன்றின. ஒன்றும் பயன்படவில்லை. அரசாங்கத்தாரோ, தங்கள் பலத்தைக்கொண்டு அவ் வியக்கத்தை யடக்கி அதன் தலைவரைப் பிடித்துச் சிறையிட்டனர். அத் தலைவர்தான் மகாத்மாகாந்தி யெனப்படுவார். எதற்கும் பட்டினி கிடத்தல் என்பது இவர் கைக்கொண்டிருக்கும் ஆயுதம். பஞ்சையும் நெருப்பையும் சேர்த்துவைத்து, இது அதைப் பிடித்துக்கொள்ளக் கூடாது என்றதுபோன்ற இயற்கைக்குமாறான உத்தரவுகளை இவர் போட்டு, அவ் வுத்தரவு நிறைவேறுவதற்காகத் தம் ஆயுதத்தைப் பிரயோகிப்பது இவரது வழக்கம். பசுக்களின் உயிரையும், ஸ்திரீகளின் பாதிவிருத்தியத்தையும் பாதுகாத்தல் அநாவசியம் என்பது இவரது சித்தாந்தம். பண்டைக்காலத்திலே ஒரு பசுவின் கன்று தற்செயலாய்த் தேர்க்காலி லகப்பட்டு இறந்ததற்காகத் தன் மகனை அந்தத் தேரின் காலிலேயே கொடுத்து முறைசெய்த மனுநீதிகண்ட சோழனுக்கும், ஒரு ஸ்திரீயின் பாதிவிருத்தியத்தைக் காப்பதற்காகத் தன் வலக்கையைத் தானே வெட்டிக்கொண்ட பொற்கைப் பாண்டியனுக்கும் சித்திக்காத மகாத்மா என்ற பட்டம் இவருக்குக் கிடைத்திருக்கிறது. இவையெல்லாம் காலத்தின் கோலமல்லவா?

இப் பெரியார், சிறையிலிருந்தபடியே யோசித்து இத் தேசம் ஒன்றுபடுதற்குரியதொரு சுலபமான வழியை இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறார். அது, தீண்டாதாரின் ஆலயப் பிரவேசம் என்பது. இக் காரியம் 1932௵ டிஸம்பர்௴ 31-உக்குள் ஒரு குறிப்பிட்ட இடத்திலே முடிவுபெற வேண்டுமென்றும், ஸவர்ணிகளால் இதற்குத் தடை யேற்பட்டால் தாம் பட்டினிகிடந்து பிராணனை விடுவது என்றும் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தம் சீடர்களைக் கொண்டு வெளிகளிலே பிரசாரம் செய்யச் சொல்லியிருக்கிறார். இது உசிதமன்று என்று அவருடைய ஆப்தர் சிலர் சொல்லியும், அவர் கேட்கவில்லை. நாள்களோ நெருங்குகின்றன. முடிவு எப்படியோ தெரியவேண்டும். ஆனால், 400-க்கு மேற்பட்ட ஆண்டுக

ளாக அயல் மதத்தினரின் ஆட்சிக்குட்பட்டிருந்தும் நாசமடையாமல் அங்கங்கே ஒளிந்துகொண்டிருக்கிற நம்முடைய வர்ணாசிரம தருமங்களைச் சிலநாளைக்குள்ளே முழுவதும் நாசமாக்கிவிட வேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் இவரது மகிமையே மகிமை! இச்சமயம் இவரது கண்ணுக்கு ஸவர்ணிகள் யாவரும் விரோதிகளாகத் தோற்றப்படுகிறார்கள். முடிந்தால், அவர்களையெல்லாம் கழுவேற்றி விடலாம் என்பதுகூட இவருடைய யோசனையில் இருக்கலாம்.

ஒரு பெரியாரை இவ்வளவு கஷ்டத்திற் காளாக்காமல் அரசாங்கத்தார் இப்பொழுதே அவரை வெளியில் விட்டு, இராச்சியாதிகாரத்தையும் அவரிடம் ஒப்பித்துவிட்டால், உடனே அவர் "தீண்டாதாரின் ஆலயப் பிரவேசத்திற்கு யாரேனும் தடை செய்தால் அவர் கழுவிலிடப்படுவர்", என்னும் உத்தரவைப் போட்டுத் தங் கொள்கையை முடித்துக்கொள்ளுவார். எல்லாவற்றிற்கும் ஈசன் செயல் ஒன்று தனியே யிருக்கின்றது. அது விடும் வழியை இனிக் காண்போம்.

ஒரு ஸவர்ணி.

---

## தாழ்ந்த வகுப்பார்களே!

அதிகாலையில் எழுந்திருங்கள். நீராடுங்கள். வெள்ளை வேஷ்டி உடுத்துங்கள். விபூதியோ நாமமோ பட்டை பட்டையாக இட்டுக் கொண்டு பகவானைத் தொழுங்கள். கூட்டமாகச் சேர்ந்து கோயிலை மூன்று முறை சுற்றி வாருங்கள். மது மாமிசங்களை நிறுத்துங்கள். மாட்டு மாமிசத்தை உடனே நிறுத்துங்கள். உங்களிடமுள்ள அநாசாரங்களையும் தீய வழக்கங்களையும் ஒழியுங்கள். கந்தை உடுத்தினும் வெள்ளை உடுத்துங்கள். உங்கள் ஊரையும் சேரியையும் வீட்டையும் வெளியையும் உடம்பையும் உள்ளத்தையும் வாக்கையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

(லோ—ரி.)

---

இழிந்த சாதிய ராயினும் புண்ணிய மியற்றிற்
கழிந்த மேன்மைகூர் சாதிய ராகுவர் கடையா
யொழிந்த பாதக மியற்றுந ருயர்ந்தவ ரெனினும்
பொழிந்த தீமைசால் புலைத்தொழிற் புன்மைய ராவர்.

(காசிகண்டம்)

உ

# தந்தை தாய் பேண்.

---

தந்தை தாய் பேண் என்பதற்கு, நீ உன் பிதாவையும் மாதாவையும் எப்போதும் பூசித்துக் காப்பாற்று என்று பொருள்.

அன்பர்களே! நம்மைப் பத்துத் திங்கள் வயிற்றில் வைத்து அதிக வருத்தத்துடன் பெற்று அன்புடன் வளர்த்தவள் நமது அன்னை. நாம் குழந்தைப் பருவத்தில் நோய்முதலியவற்றால் பீடிக்கப்படுங் காலத்து மிக வருந்தியவள் நமது நற்றாய். நம் நாவிற்கினிய உணவுகளை ஊட்டியவள் நமது மாதா. நமக்கு முலைப்பாலூட்டி நம்மை வலுக்கச் செய்தவள் நமது தாய். இதுபற்றியே "பீரம் பேணி பாரந் தாங்கும்" எனவும் அருளினர். நமது அறிவு வளர்ச்சிக்குக் காரணமாகிய கல்வியைக் கற்கச் செய்தவர் நமது பிதா. இத்தகைய பிதாமாதாக்களை நாம் என்ன வருத்தப்படினும் அன்புடன் வழிபட்டுக் காப்பாற்றவேண்டும். நம்மால் நம் தாய் தந்தையருக்குக் கிடைத்த உபசாரமே அது கண்ட நமது பிள்ளைகளால் நமக்கும் கிடைக்கும். தாய் பசித்திருக்க உண்டவர் உரைக் கொணாப் பாவியாவர்.

"தாய்பசி யுழந்துயிர் தளரத் தான்றனி
யாய்பெரும் பாழ்வயி றளிக்கும் பாவியும்.'

என்றார், நமது கம்பநாடர்.

நாம் நமது தாய் தந்தையரை முன் உண்பித்து அதன்பிறகு உண்டல் வேண்டும்.

"தாயும் தந்தையு முணவுண் ணாத சழக்கனும்."

என்றார் நமது சிவப்பிரகாச சுவாமிகள்.

நமது தாய் தந்தையர்களை நாம் முன்னதாக அறிந்த தெய்வங்கள். தந்தைதாய் பேண் என்றதோடமையாது, "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" எனவும், "தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை" எனவும் பிறண்டும் பேசினர்.

பீஷ்மாச்சாரியார் தம் தந்தை சந்தனு மகாராஜாபொருட்டு இவ் வுலக வின்பத்தினை வெறுத்தார். சந்தனு மகாராஜா பீஷ்மாச்சாரியாரை நோக்கி, "தந்தையர்க் குதவு முதவியி னெனக்குச் சதம

டங் குதவினை" என்று பாராட்டினார். தசரதர் வேண்டும் வரம் கேள், தருவேன் என்றபோது, ஸ்ரீராமபிரான் கைகேசியைத் தனக்குத் தாயாம் வரமே கேட்டார். கைகேசி தன்னைக் கானக மனுப்பியபோது ஸ்ரீராமபிரானது முகம் அதிகமகிழ்வால் அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றது. அப்போது கைகேசியை நோக்கி "மன்னவன் பணியன் றாகில் நும்பணி மறுப்பனோ" என்றியம்பினார். நம் தாய்தந்தையர்களை அன்புடன் வழிபட்டுக் காப்பதே நமது கடமையாம். அதுவே தவமாம்.

# நன்றி மறவேல்.

நன்றிமறவேல் என்பதற்கு ஒருவர் உனக்குச் செய்தஉபகாரத்தை மறவாதே என்று பொருள். நன்றிமறவேல் என்றதனால், நன்றல்லதை யன்றே மறத்தல்வேண்டும் என்பது பெறப்படும். இது பற்றியே,

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

என்று நமது திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளினார். தினையளவு உதவியினை நமக்குச் செய்யினும் பனையளவாக நாம் கோடல்வேண்டும். அதுவே சீரியோர்செயல். நமக்கு நன்மைசெய்தாரது நட்பினை நாம் விடுதல் கூடாது. நமக்கு முன் ஓர் நன்மை செய்தவர் பின் கொன்றாலன்ன துன்பம் செய்யினும் முன்னர்ச் செய்த நன்மையினையே நாம் நினைக்கவேண்டும். நினைத்தால் பின் செய் துன்பங்கள் தனக்குத் தோன்றாதனவாய்க் கெடும். பெரிய அறங்களை அழித்தார்க்கும் உய்யும்வழி உண்டாகும்; செய்ந்நன்றி சிதைத்தார்க்கு உய்யும்வழியில்லை. இடையறாத அன்பினையுடைய தாய், தந்தை, குரு, அந்தணர், பசு, பாலர், பாவையரென் றின்னோரைக் கொன்றார்க்கு முய்வுண்டாம்; செய்ந்நன்றி கொன்றார்க்கோ உய்வே யின்றாம். இதுபற்றியே,

"சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றன் மாயா
உதவிகொன் றார்க்கெங் கேனுமொழிக்கலா முபாயமுண்டோ"

என்று ஸ்ரீ ராமாவதாரத்திலும்,



"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர்க் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வருவாய் மருங்கிற் கழுவாயு முளவே,
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென்
றறம்பா டின்றே யாயிழை கணவ

என்று புறநானூற்றிலும், கூறப்பட்டிருக்கின்றது.

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (குறள்)

கண்ணபிரான் பாண்டவர்கட்காகத் துரியோதனன்பாற் றூது சென்ற காலத்தில் கர்னமகாராஜனிடம் அவனது பிறப்பினை அறியக் கூறி, 'நீ பாண்டவரோடு சேர்க' என்றியம்பினார். அப்போது, கர்னமகாராஜன் கண்ணபிரானைப் பார்த்து இன்னானென் றறியத் தகாத என்னை அரசுமாக்கி முடிசூட்டி எல்லாச் சிறப்புகளும் துரியோதனன் எனக்கே யளித்தான். இப்போது பாண்டவர்கட்கும் நூற்றுவர்க்கும் போர்மூண்டதென்றறிந்து, பாண்டவர்பாற் சேர்வனேல், செய்ந்நன்றி கொன்றவனாவேன். ஆகலான், நான் நீவிர் கூறியதற் கிசையேன் என்றான்.

"ஆரென் றறியத் தகாதவெனை யரசு மாக்கி முடிசூட்டிச்
சீருந் திறமுந் தனதுபெருந் திருவு மெனக்கே தெரிந்தளித்தான்
பாரின் றறிய நூற்றுவர்க்கும் பழிதீர் வென்றிப் பாண்டவர்க்கும்
போரென் றறிந்துஞ் செய்ந்நன்றி போற்றா தவரிற் போவேனோ"

ஸ்ரீ ராமபிரான் கார்காலம்கழித்து வருகின்றேன் என்று சென்ற சுக்கிரீவ மகாராஜன் அங்ஙனம் வாராமையால் கோபங் கொண்டு இளையபெருமாளை நோக்கி,

"நன்றி கொன்றரு நட்பினை நாறுத்
தொன்று மெய்ம்மை சிதைத்துரை பொய்த்துளாற்
கொன்று நீக்குதல் குற்றத்தி னீங்குமால்"

என்று திருவாய் மலர்ந்தருளினார்.

செய்ந்நன்றி மறத்தலின் மிக்க பாவமும், செய்ந்நன்றி யறிதலின் மிக்க அறமு மில்லை.

க. ஐயாறுப் பிள்ளை, தமிழ்ப்புலவர்.

உ

முகவாபுரி

# இராஜராஜேஸ்வரி அம்மன் திருவிருத்தம்.

**மா**வுற் றெழும்பயோ தரம்வண்டு கிண்டியமருக்கொளவெருட்டிநிமிரொண்
மாதிரத் திருளடர்த் தறல்சைவ லக்குழு வலித்தற நெறித்து நீண்டு
மான்மதப் பனிநீ ரளாவிநறு மதுமலர் வனைந்தகொந் தளக பாரம்
வரிவிற் றரித்திரு புறக்கடை குனித்தபுரு வத்தினெண் மதியை வாங்கி
வைத்தசிந் தூரநுதற் கருணைப்ர வாகநிதி மண்டுதெண் டிரைகி ழித்து
வருமச்ச மோவுவமை தனின்மிச்ச மோகருதின் மனதச்ச முறவு றுத்தும்
வடிவஞ் சிறந்தகரு விழிமொய்த்த குழைவள்ளை வளைமுத்துமயின்முருந்து
மணிவைத்த கிரணமுறு வற்றுவரி தழ்க்குமுத வாயமுத மதுர வசனம்
வதனமதி பிம்பப் பெருங்கயி றளைந்ததிரு மங்கல மிலங்கு களநீள்
வடகுவடு தவிடுபொடி படநிமிரு திடகரட மடைபொருவு கடின வேழ
மருப்பட்டு நற்பட் டுடைக்கச் சிளைப்பிச்சு வச்ரமணி கோலி யிட்ட
வடங்கொண் டடங்கா திடங்கொண்ட மணிமார் பிடங்கவர்ந்தண்டகோள
வரைமுட்டி யப்புறத் தினுமெட்டி விரிமட்டு மலர்கட்டு தெரிய லிட்டு
மகிதலத் துயிரினுக் கினிதா தரப்பால் வடித்தள்ளி வைத்த கும்ப
வனக்குங்குமப்பாளிதக்கொங்கைவேய்த்தோண்மலர்க்காந்தளங்கைவிரல்கள்
வளர்கற்ப கத்திளந் தளிர்நகஞ் சுகாசி மயிரெனும் மொழுகு தாரை

**பா**வுற் றெழும்பயோ ததிபொருந் திரையுதர பந்தன மடிப்ப டங்காப்
பாருலகெ லாங்கரு வுயிர்த்தவா லிலைவயிறு பகீரதி சுழித்த வுந்தி
பகருமின் னிடையல்கு லரவுகத லித்துடை பணியலவ னேமு ழந்தாள்
பருவரா லவநெற் பொதிகணைக் கால்மணிப் பாடுகைச் சிறுத ராசு
பழமறைப் புத்தகப் புறவடி யிரற்கெளிறு பைம்பொனொளி மேனி வாய்ந்த
பச்சைக் கலாபமா கதமயிலி கற்கண்டு பாகுசர்க் கரைமு னிந்து
பாவிரச மொழுகுங் குரற்குயிலி யழியாப் பரம்பரை சதாக மத்தி
பார்வதி க்ருபாநிதி தயாநிதி சதாகால பஞ்சகிர்த் தியமி யற்றும்
பக்குவ கலாநிதி யெனத்திகழு சுத்தவித யப்பருவ கொர்வ விமலி
பஞ்சாட் சரச்சக் கரத்தியென் றமரர்கோன் பதுமாச னத்த னத்தன்
பன்முறை துதித்திரு புறத்தினு மிருக்கவிண் பண்ணவர்க ளூரகர் சித்தர்
பத்தர்கள் வித்தியா தார்தயித் தியர்மறை பண்ணுதவ முனிவ ரட்ட
பாலர்கின் னரகருட கந்தருவர் முதலியோர் பருதிமதி கோள்கள் நான்கு



பக்கம்வில காதுதே னுக்குருகி வருகின்ற பண்ணளி யெனக்கு ழுமியே
பங்கய மலர்க்கர முகிழ்த்தரிய வானந்த பரவச மடைந்து விழிநீர்
பனித்துடல் குழைத்தென்பு நெக்குருக மதுரசீ தப்பனுவல் பாடியாடி

**கா**வுற்ற சீதமந் தாரமல ரைச்சாற் காலமழை மாரி யென்னக்
கைக்கொடு மசாரிந்தடிபணிந்துநின்னருள்பெறக்கருதிவெள்ளிடையிலாமல்
கடலென வளைந்துநாற் புரனுமா கரவெனக் கதறுமொலி திசையடைப்பக்
கையாயி ரங்கொடு கடாவுவா ணன்முழவு காசினியெ லாந்து வைப்பக்
கண்ணன்மா காளன் பிருங்குவா யூதுசங் கத்துழனி பொங்க வெங்குங்
கல்லெனப் பல்வேறி யங்கலித் திடமழுக் கப்பணந் தண்ட நாஞ்சில்
கவண்சக்க ரம்பிண்டி பாலஞ் சராசனங் காலவேல் மூன்று தலைசேர்
கழுக்கள்பா ணந்தோ மரஞ்சங்த முற்காங் கருதுகே டகநாந் தகம்
கண்டவர் நடுங்குமெழு முதலான பலவகைக் கடாவாயு தங்கள் பற்றிக்
காளிகள் கூளியரை நாழிகை நிலாமலெக் காலமும் பணிகள் செய்யக்
கரியஇருள்தின்றுவிரிமதியினொளிவென்றவெண்கவிகைமுடிமேனிழற்றக்
கழறண்ட பகிரண்ட நிறைகின்ற திவளொன்று கட்டுகே தனமு லாவக்
கமலா சனத்தியு மனத்தினுள் வியந்துநற் கைலாகு தாநி மிர்ந்து
கருதுமுக வைச்சேது பதியாகு நீடூழி காலந் தழைக்க வருளிக்
காசினிமு ழுதுமுப் புவனமும் விலைபெறக் காட்டுகின் கிணிபு னைந்த
க்ழற்பாது கைத்துகள் விளக்கியெழி லமரர்தங் கன்னிய ரெடுத்து வைப்ப

**வீ**வுற்ற பணிவிடைக் காயுற்று நின்றுவிழி யிமையா தநேகர் நிற்ப
இலைபரவு சுரபிசிந் தாமணிகொ ளிந்த்ராணி யின்குமுத வாய்தி றந்தே
யியல்கரக பாலிதிரி சூலிபரி பாலிபக டேறுவெங் கால காலி
இனியகென மாரிபொரு மிடசங் காரிவிளை யாட்டுபவ மீட்கு மாரி
யிணைநற் பதத்தியெழி லுறுமற் புதத்திமன் றெய்துமுயர் சிற்ப தத்தி
யேறுபரி வாகினி பவானிடா கினியசுர ரிரியவரு ஜெகமோ கினி
யென்தன்னையேபுவனவுயிரன்னையேமனதிலெனுமென்னையேயருள்வையே
யென்றகட் டியமதிர்ந் தண்டமுட் டிடவிரிந் தென்றுநின் றொளிருமணிகள்
இட்டமகு டம்புனைந் தெட்டுமா திரமுநா லெட்டற மலிந்து வளர
சுறின்மறை யாகம புராணமிதி காசநூ லெங்கெங்க ணும்மொ லிப்ப
இப்புவன முதலாய முப்புவன மூங்கடந் தேகபர லோக மளவும்
இலங்குசிவ ராத்திரி துலங்குகொலு வீற்றினி திருந்தர சியற்று மரசே!
வத்தடிய ருள்ளச் சரோருகப் பூவினின் றிறங்காது வளரன்ன மே
யாவர்க்கும் வரமளித் தருள்புரிய வுருவுகொண் டிலங்குநற் பரதெய்வ மே
யெளியன்வறு மைப்பிணிகள் முழுதுமக லப்பணித்தினமனேகம்புரிகுவாய்
இமயபரு வதராஜ குமரிமுக வாபுரி யிராஜரா ஜேஸ்வரீ யே.

[இராமநாதபுரம் சமஸ்தானம் முதுகுளத்தூர் அருட் புலவர் திரு. நல்லவீரப்ப பிள்ளை யவர்கள் பௌத்திரரும், திரு. சுந்தரம் பிள்ளையவர்கள் புத்திரருமான மஹாவித்வான் திரு. சுப்பைய பிள்ளையவர்கள் இயற்றியது. இத் திருவிருத்தத்திற் காணப்பெறாத சிலசீர்களைப் புதியவாகவியற்றி, அழுத்தமான எழுத்துக்களால் அமைத்திருக்கிறது. பழையன முழுதும் சிதையாதிருந்து உதவின் நன்றியறிதலுடன் ஏற்று, உதவினர் பெயருங் குறித்து வெளியிடப்பெறும்.]

மு. நமசிவாயம் பிள்ளை,
தொழில்வரி இன்ஸ்பெக்டர், தேவகோட்டை.

---

# மார்கழி மாதம் திருவெம்பாவை

(மட்டுவில் திரு. சி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.)

மிருகசீர்ஷ நக்ஷத்திரமும் பௌர்ணிமையும் கூடும் மாதம் "மார்கசீர்ஷ" என்று சொல்லப்படும். இதுவேமார்கழிமாதமென்று வழங்குகிறது.

ஒரு சூரிய உதயம்முதல் மற்றொரு உதயம்வரை செல்லுகின்றநேரமானது மனிதர்களுக்கு ஒருநாள் ஆகும். ஒரு மகர சங்கராந்திதொடங்கி மற்றொரு மகரசங்கராந்தி வரையிற் செல்லும் நாட்கள் மனிதர்களுக்கு ஒரு வருடமாகும். மனிதர்களின் ஒரு வருடகாலம் தேவர்களுக்கு இராப்பகலோடுகூடிய ஒரு நாளாகும். இதனுள் உத்தராயணமாகிய தை மாசத் தொடக்கம், ஆனி யிறுதியாகவுள்ள ஆறு மாசங்களும் தேவர்களுக்குப் பகற்கால மென்றும், தக்ஷிணாயன காலமாகிய ஆடி தொடக்கம், மார்கழி யிறுதியாக உள்ள ஆறு மாதங்களும் அவர்களுக்கு இராக்கால மென்றும் சொல்லப்படும்.

ஒவ்வொரு மாதமும் ஐயைந்து நாழிகையாகச் செல்லுகின்ற அறுபது நாழிகையுடைய தேவதினத்தில் உதயாத் பூர்வம் ஐந்து நாழிகையாகப் பதினொரு முகூர்த்தங்களுஞ் சென்று பன்னிரண்டாவது முகூர்த்தமாகிய மார்கழிமாதமே தேவர்களுக்குப்(ப்ராஹ்மீ முகூர்த்தம்) புலரிக்காலமாகிறது.

தேவர்கள் இம்முகூர்த்தத்திலே பரமேசுவரனைத் தியானித்துத் துதித்து நித்திய கருமங்களை நடாத்துகின்றார்கள். இக்காலத்திலே மனிதர்களும் "வைகறைத் துயிலெழு" என்று நமது மூதாட்டியார் கூறியபடி நித்திரை விட்டெழுந்து, ஸ்நானம், சந்தியா வந்தனம், ஆலய வழிபாடு என்னும் இவைகளைச் செய்தால் தேவர்கட்குப்



பிரீதி உண்டாகுமென்று மகரிஷிகள் கற்பித்திருக்கின்றனர். பன்னிரண்டு மாதங்களிலும் சிறப்புற்றது மார்கழி மாதமாகும்.

மார்கழி மாதத் திருவாதிரை நாளுக்கு முந்திய ஒன்பது நாள் தொடக்கம், திருவாதிரை முடிவுள்ள பத்து நாளும் ஆலயங்களில் புலரிக் காலப்பூசை முடிவில், தேவாலயங்களிலும், மடாலயங்களிலும் திருவாசகத்திலுள்ள திருவெம்பாவை ஓதப்படுகின்றது. சைவ் சமய குரவருள் ஒருவராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் தியானிக்க முத்தி தருவதாகிய திருவண்ணாமலைக் கெழுந்தருளியபோது அருணாசலேசுவரர், குரு முகூர்த்தமாகத் தரிசனங்கொடுக்கத் தரிசித்துக்கொண்டு அங்கே வாசஞ் செய்கின்ற காலத்தில், ஆங்குள்ள மாதர்கள் தாங்கள் தடாகத்தில் புனலாடும் போது பயனற்ற வீண் பாக்கள் பாடுவதைக் கண்டு, அவர்கள்மீது கருணைகொண்டு, அம் மாதர்கள் ஓதிப் புனலாடும் பொருட்டுத் திருவெம்பாவை என்னும் இருபது திருவாசகங்களைப் பாடியருளினர். இத் திருவெம்பாவை திருவருட் சக்தியை வியந்து பாடப்பட்டதாகும். ஆன்மா மலமாகிய இருளில்கிடந்து துஞ்சாது பரிபாகத்தைப் பெறும்பொருட்டுத் திருவருட் பிரவாகமாகிய தடாகத்துள் மூழ்கும்படி அதனை யெழுப்புவதே திருவெம்பாவையின் தத்துவார்த்தமாகும்.

"மலவிருளூற் றுறங்காமல் மன்னுபரி பாகவருட்
செலமுழுக வருகவெனச் செப்பல்திரு வெம்பாவை."

எனவரூந் திருப்பெருந்துறைப் புராணச் செய்யுட் பாகத்தாலும், இது நன்கு அறியத் தக்கதாகும். மேலும், மலத்தைக் கழுவுவதே ஸ்நானஞ் செய்தல் என்றும், திருவருட்பெருக்கே தடாகம் என்றும் மாணிக்கவாசகப் பெருமான்,

"தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்குமடு........"

என எடுத்துக்காட்டி யிருப்பதாலும், இஃது இனிது விளங்கும்.

நடராஜப் பெருமான் சிற்சபையைவிட் டெழுந்தருளுவது படைத்தலாகும் (சிருஷ்டி). இரட்சாபந்தனம் தரிப்பது காத்தலாகும் (ஸ்திதி). திருஷ்ண கந்தந் தரிப்பது அழித்தலாகும் (சங்காரம்). வெள்ளை சாத்துவது மறைத்தலாகும் (திரோபவம்). திருவிழாக் கொண்டாடுவது அருளலாகும் (அநுக்கிரகம்). நானென்று

ஆணவங்கொண்ட அவுணரைச் சங்காரஞ் செய்து அவர்கள் உடம்பின் கரிய சாம்பரைத் திலகமாக்கித் தரித்துக்கொண்ட பாவனையாகக் கிருஷ்ண சந்தனஞ் சாத்தப்படுகிறது. சங்காரகாலத்தில் அவரது திருமேனி அதிக உக்கிரமாக இருந்தபடியால், அது தணியும்படி தேவர்கள் பரமசிவனது திருமேனியை வெள்ளைவஸ்திரத்தாலும், வெண்ணிறப் புஷ்பங்களாலும் மறைத்தார்கள். அப்பாவனையாகவே வெள்ளை சாத்தப்படுகிறது.

சிதம்பரம் என்னுஞ் சொல், ஞானகாசம் என்று பொருள்படும். சிவபெருமானுக்கு ஞானமே திருமேனியாதலாலும், ஞானிகளின் உள்ளத்தின் பேரொளி சிவபெருமானேயாதலாலும், சிதம்பரம் அவ் விறைவனது திருமேனி யெனப்படும். இது, பஞ்சபூதஸ்தலங்களில் ஒன்றாகிய ஆகாசலிங்க ஸ்தலமாம். கனகசபையிலே சிவபெருமான் வலத் திருவடியை முயலகன்மீது ஊன்றி, இடத் திருவடியைக் குஞ்சிதபாதமாய் உயர்த்திச் சதாகாலமும் திருநடனஞ் செய்தல், ஆன்மாக்களை அநாதியே பந்தித்த ஆணவாதி மலங்களை நீக்கி முத்தியின்பங் கொடுக்கும் நோக்கமேயாம். திருவாதிரை நாளன்று எம்பெருமான் பொன்னிறப் பூக்களாகிய செவ்வந்திமலர்களால் அழகு செய்யப்படுதல் அவர் படைக்கும் வன்மையை உடையவர் என்பதைக் குறித்தற்கேயாம்.

போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்''

என்று மாணிக்கவாசகப் பெருமான் தமது திருவாசகத்தில் திருவெம்பாவையிலும்,

''மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளாம்''

என்று ஆண்டாளம்மையார் திருப்பாவையிலும், இம் மாதச் சிறப்பினை விதந்து கூறியிருக்கின்றனர். இவ்வாறிருக்கவும், இம் மாதம் விவாகாதி சுபகர்மங்களுக்கு நீக்கப்பட்டதன்காரணம், இது ஸ்நான ஜபதபங்கட்கு விசேடகால மானதாலும், 'ஆலித்தே பெரும்பாரத மார்கழி' என்றபடி பாரத யுத்தம் நிகழ்ந்த மாதமானதாலும் என்பர்.

உ

# நமது நாட்டுப் பொருள்கள்.

கடைக்குப் போய் எந்தச் சாமானை வாங்குவதானாலும் நாலு ரகங்களைப் பார்த்து ஏதாவதொன்றைப் பொறுக்கிக் கொள்வது நம்மவர் சுபாவம். இந்த மாதிரி பொறுக்கிப் பார்த்து வாங்குவதற்கு சுதேசி சாமான்களில் பல ரகங்கள் இருக்கின்றனவா? என்று ஒருவர் கேட்கலாம். திருச்சியில் நடக்கும் சுதேசிக் கண் காட்சிக்குச் சென்று திரும்பிய ஓர் நண்பர் இதற்கு சரியான விடை கொடுத்திருக்கிறார்.

காலையில் எழுந்ததும் பல் துலக்குவதற்கென்று நூற்றுக்கணக்கான பற்பொடி ரகங்கள் இந்தியாவிலேயே செய்யப்படுகின்றன. சுமார் இருபத்தைந்து விதமான சுதேசிப் பற்பசைகள் வியாபாரத்திற்கு வந்திருந்தன. சுதேசி 'பிரஷ்' கூடத் தயார் செய்யப்படுகின்றன. இவைகளைத் திருச்சியில் கண்டோம்.

ஸ்நானத்திற்குத் தைலம் வேண்டுமா? சுதேசியில் 100 ரகங்களுண்டு. சோப்பு தேவையா? 300 ரகம் சுதேசியில் அகப்படுகின்றது. அயல்நாட்டு சோப்புகளின் மணத்திலும் குணத்திலும் சிறிதும் பின்னடையாமல் சுதேசி சோப்புகள் உள. துணி வெளுக்கும் சோப் 400 ரகங்களுக்கு மேல் இருக்கும்போலிருக்கிறது. க்ஷவரத்திற்குக் கூடப் பலவித சுதேசி சோப்புகள் இன்று தயார் செய்யப்படுகின்றன.

ஆடை அணிவதற்குக் கதரில் எவ்வளவு ரகங்கள் வந்துவிட்டன! மீரட்சில்க் முதல் திருப்பூர் நாலுமுழத் துணி வரையில் எத்தனை ரகங்கள்? நமது தமிழ்ப் பெண்மணிகள் வழக்கமாக அணிந்துகொள்ளும் ஓர் பட்டுப் புடவையையும் கடையிலிருந்த ஓர் கதர்ப் புடவையையும் நிறுத்துப் பார்த்தோம். கதர்ப் புடவைதான் கனத்தில் குறைந்திருந்தது.

வீட்டுக்கு வேண்டிய ஜாடிகள், கண்ணாடிகள், சிம்னிகள், விளக்குகள், பூட்டுகள், குடைகள், கைத்தடிகள், பூட்சுகள் எல்லாவற்றிலும் பல பல ரகங்கள் சுதேசியில் உண்டு என்பதை நேரில் கண்டோம்.

சராசரி மனிதனின் தினசரி வாழ்வுக்கு இதைவிட என்ன வேண்டும்? பொறுக்கி வாங்க இவ்வளவு ரகங்கள் இருக்கும்போது வாங்குகிறவன்தான் என் கவலைப்படவேண்டும்? இனி, நம்மவர் பூரணமாக ஆதரித்துச் சுதேசியம் ஓங்கிற்றானால் இந்தியாவுக்கு நிகரானநாடு உலகிலேயே இல்லாதவாறு செய்து விடலாமென்று நமக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

சங்கு.

# குருவாயூர் பிரச்னை.

சென்னை மறைத்திருவாளர் டி. ஆர். இராமச்சந்திர ஐயர் கடிதம்.

திவான்பகதூர் டி. ஆர். இராமச்சந்திர ஐயர் அட்வோகட் அவர்கள், தருமகர்த்தா ஜாமொரினுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கிறார்:-காந்திஜி சர்வஜனவாக்குக்கணக்கு எடுக்கவேண்டுமென்று சொல்வதெல்லாம் சூழ்ச்சியாகும். 10 மைல் விஸ்தீரணத்திற்குள் சர்வஜன வாக்குக் கணக்கு எடுக்கவேண்டுமென்பதில் அர்த்தமில்லை; இப்பிரச்னை சம்பந்தமாக ஆயிரக்கணக்கான மைல்களுக் கப்பாலுள்ள ஜனங்கள் மிகுந்த கவலை கொண்டிருக்கின்றார்கள். ஆதலால், நான் தங்களுக்கு கீழ்க்கண்ட கேள்விகள் கேட்கிறேன். சர்வஜனவாக்கிற்குத் தாங்கள் உடன்பட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். சர்வஜனவாக்கு தங்களுக்கு விரோதமாகப் போய்விட்டது. அப்பொழுது ஆலயத்தில் வணங்குகிறவர்கள் தங்களுக்கு விரோதமாக வழக்குத் தொடர்ந்தால், அவ்வழக்குக்குத் தாங்கள் என்னபதிலளிக்கப்போகிறீர்கள்? சட்டத்திற்கு சர்வஜனவாக்குசரியான பதிலாகமாட்டாது. இவ்விதப்போலி நாடகத்தில் தாங்கள் எப்படிக்கலந்துகொள்ளமுடியும்? கமுதி கோயிலுக்குஇராமநாதபுரம் ராஜா தர்மகர்த்தர். அவர் அந்த ஆலயத்திற்குள் பிரவேசிக்கவிரும்பிய நாடார்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்யலானார். ஆனால், அந்த ஒப்பந்தத்தை ஹைக்கோர்ட்டாரும் பிரிவி கவுன்ஸிலரும் தள்ளிவிட்டனர். அநேககௌரவமான வைதீக நண்பர்களின் தூண்டுதலின் பேரில் நான் இதைத் தங்களுக்கு எழுதுகிறேன்.

தருமகத்தா, திரு. ஜாமொரின் அவர்கள் பதில்.

இதுவரைக்கும் நான்எனது அபிப்பிராயத்தை மாற்றவில்லை. அப்படி எனது அபிப்பிராயத்தை மாற்றக்கூடியசந்தர்ப்பமும்ஏற்படாது என்றுநான் நம்பிக்கையுடையவனாக இருக்கிறேன்.ஆனால், எனது பயமென்னவெனில் சிலசட்டசபை அங்கத்தினர்கள் மசோதாவைக் கொண்டுவர அனுமதி வாங்கி விடுவார்களோ என்பதுதான். அப்படியானால் ஜஸ்டிஸ்கட்சி நிச்சயமாகத் தனதுவழியில் செல்லுமேயொழிய நம்மை ஆதரிக்க மாட்டார்கள். அவ்வித நிலைமை ஏற்படில் இப்பிரச்னை அகில இந்திய பிரச்னையாக ஆகிவிடும்.இதைக் கட்டுப்பாடுடன் எதிர்க்கவேண்டியது இந்தியாவெங்குமுள்ள ஹிந்துக்களின் கடமையாகும்.

---

**பினாங்கு நகரவிடுதி:**—ஐப்பசி உருவ ஷை விடுதியில் கூடிய நகரத்தார்கள் ஷை விடுதிக்குரிய சட்ட திட்டங்களைத் தீர்மானித்து அச்சியற்றி வழங்கியுள்ளார்கள்.

**பர்மாசட்டசபை மெம்பர்:**—திருவாளர் அ. மு. மு. வெள்ளையன் செட்டியாரவர்களைப் பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் சங்க விருப்பப்படி, அரசாங்கத்தார் சட்டசபைக்கு அங்கத்தினராகத் தெரிந்தெடுத்திருக்கின்றார்கள்.

# செய்தித் திரட்டு.

---

**தனவணிகன்:**—இப்பெயருடன் வாரத்தாள் இரங்கூன் பர்மா நாட்டுக்கோட்டைச் சங்கத்திலிருந்து, தைமீ முதல் வெளிவருமென, சங்கக்காரியதரிசி திருவாளர் சா. அ. அ. கதிரேசன்செட்டியார் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதனைவரவேற்று ஆதரிக்கவேண்டியது ஒவ்வொரு தனவணிகருக்கும் உரியகடமையேயாகும்.

**ஆவினிப்பட்டி:**—விவேகாநந்தர் கல்விக் கழகத்தின் ஆறாவது ஆண்டு ஆரம்மாதக்கூட்டம் கார்த்திகை கஎஉ மாலை ரு மணிக்கு நெற்குப்பை பாலபண்டிதர், திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. கடவுள் வாழ்த்துக் கூறி வரவேற்பு உபசாரப்பத்திரம் வழங்கியதும், தலைவர் விவேகாநந்தரின் பால்ய வாழ்க்கை பற்றியும், மாணவர் அன்பானதானம், அவதாரங்கள், ஆபுத்திரன், ஈசன்செயல், கல்வியின்பம், தமிழ்ப் பெருமைச் சம்பாஷணை, செல்வம், பெரியபுராணம், பொய், மணிமேகலை, முயற்சி, ஆரோக்கியம் என்பவைகளையும் பிரசங்கஞ் செய்தனர். புதுக்கோட்டை டாக்டர் திரு. அ. வேணுகோபால் நாயுடு அவர்கள் நல்லாசி பகர்ந்தனர். தலைவர் கண்ணப்பர் சரிதமாண்பு விளக்கிப் பலநூற் பிரமாணங்களுடன் முடிப்புரை பகர்ந்தார்.

**பாராட்டு விருந்து:**—சென்னை கார்ப்போரேஷனுக்குத் தலைவரான செட்டிநாடு குமாரராஜா அவர்களைக் காரைக்குடி நகரபரிபாலன சபையார் 4—12—32 ல் வரவேற்று, விருந்து நடாத்தி மிகப்பாராட்டினர்.

**தேவகோட்டை:**—நேற்றையபிற்பகலில் நாட்டாண்மைக் கழகத் தலைவர்களாகிய ஜமீந்தார் சகோதரர் திருவாளர் அள. அரு. ராம. சொக்கலிங்கச்செட்டியார், காரைக்குடி திருவாளர் திவான்பகதூர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியார் இருவர்களின் உருவப்படங்களை சப்கலக்டர் மகாராஜஸ்ரீ R. M. சுந்தரம் M. A. I. C. S. அவர்கள் திறந்துவைத்தார்கள். சப்கோர்ட் பிரதமநீதிபதி மகாராஜஸ்ரீ K. கிருஷ்ணகுருப் B. A. B. L. அவர்கள் தலைமையில், தாலுகாபோர்டு தலைவர் திவான்பகதூர் சிதம்பரம் செட்டியார் அவர்கட்கு உபசாரப்பத்திரம் வழங்கி, அவர்கட்கும் உபதலைவர் அங்கத்தினர் ஆதியோர்கட்கும், போர்டு உத்தியோகஸ்தர்களால் ஒரு விருந்துவிழா நடத்தப் பெற்றது.

**மதுரை:**— தமிழ்ச் சங்கத்தின் 31-ம் வருஷோத்ஸவம் இன்று மாலை 4 மணிக்கு மதுரையில் ஸேதுபதி ஹைஸ்கூல் ஹாலில், இராமநாதபுரம் ஸேதுஸமஸ்தானாதிபதிகளாகிய மாட்சிமைதங்கிய ஷண்முக ராஜேசுவர நாகநாத ஸேதுபதி மஹாராஜா அவர்கள் அக்கிராசனம் வகிக்க நடைபெறும்.

**மதுரை சைவசித்தாந்த சமாஜம்:**—இதன் முதலாவதாண்டு நிறைவு விழா ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசர் திருக்கல்யாண மண்டபத்தில், சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்பாளர் சைவத்திருவாளர் T. K. சிதம்பரநாத முதலியார் B. A. B. L. அவர்கள் தலைமையில், இம்மதி யல சனிக்கிழமை முற்பகல் பிற்பகல்களில் பற்பலர் பிரசங்கங்களுடன் நடைபெறும்.

**பரிசளிப்பு:**—சென்னை சர்வகலாசங்கத் தனித்தமிழ் வித்துவான் பரீக்ஷையில், முதல் வகுப்பில் முதலாவதாகத் தேறிய, திரிசிரபுரம் நாஷனல் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் திரு. T. P. பழநியப்ப பிள்ளை யவர்களுக்கு, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடாலய கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத தம்பிரானவர்களின் நியமனப் பரிசு ரூபா ஆயிரம், 1—10—1932ல், மதுரை விக்டோரியா ஹாலில் மாட்சிமை தங்கிய சண்முக இராஜேஸ்வர நாக நாத சேதுபதி மகாராஜா அவர்கள் தலைமையில், மகாமகோபாத்தியாய டாக்ட்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் வழங்கினார்கள்.

**திருவண்ணாமலை ஞானதீபக்குடை மகோற்சவம்:**—தொண்டைமண்டலம் உயர் துளுவ வேளாள பொன்னேரி மரபு வீரகுட்டி வமிசம் திருவாளர். சீனிவாசமுதலியாரின் சேமநிதியினின்று எழுபத்தைந்து வருடங்களாக நடந்துவருகிற முறையே, சென்னை மார்க்கண்டேயில் பாங்கு எட்கினார்க்கு திருவாளர் பெ. கிருஷ்ணசாமி முதலியார் இவ் வருடம் இனிது நடத்திவைத்தனர். இக்குடையின் சிறப்பு /முதலியன அடுத்த திங்களில் வெளியிடப்பெறும்.

**குடியால் குடி கெடுகிறது:**— 70 வருஷத்திற்கு முன் இந்தியாவின் மதுபான வருமானம் ஒரு கோடி ரூபாய். 1900-ம் வருஷத்தில் 6 கோடி ரூபாய். 1929-ம் வருஷத்தில் 24 கோடி ரூபாய். இந்தியாவின் மொத்த வரிவருமானம் 250 கோடி. கள் சாராய வருமானம் 24 கோடி. தென்னாட்டில் மட்டும் நாள்தோறும் மதுபானத்தில் ஐந்து லக்ஷ ரூபாய் செலவாகிறது. இந்தியா முழுமையும் வருஷத்தில் மதுபானத்தில் 80 கோடி ரூபாய் செலவாகிறது. இதில் சர்க்கார் வருமானம் 24 கோடி ரூபாய். சென்னை மாகாணத்தில் மதுபானத்தில் வருஷத்திற்கு 17 கோடி ரூபாய் செலவாகிறது. இதில் சென்னை சர்க்கார் வருமானம் 5 கோடி ரூபாய். சென்னை மாகாணத்தில் நிலவரி மொத்தம் 7 கோடி. கள் சாராய வரி 5 கோடி.

**பரிமணங்குடி:**—ஸ்ரீ சண்முகநாத சுவாமி கோயிலில் ஐப்பசிமீ கார்த்திகை நாள் சைவ சன்மார்க்க சங்கம் கூடி, தமிழ்மறை முழங்கத் திரு. மு. முத்துப்பிள்ளை முதலானோரால் பிரசங்கங்களும் பிறவும் நடைபெற்றன.

ஸ்ரீ ஷண்முகநாதசுவாமி கோயிலில் திருக்கார்த்திகை நாள் விசேட அபிடேக ஆராதனங்களும், ஸ்ரீ பரமகுரு சுவாமிகள் குருபூஜையும் முடித்து சைவசன்மார்க்க சங்கம் நடைபெற்றது.

**வாழ்த்துச் செய்யுட்கள்:**— திருவண்ணாமலைத் திருக்கார்த்திகைத் திருவிழாவையும், ஷை தேவஸ்தானத் தருமகருத்தர் திருவாளர் ராவ்பகதூர் வீரப்பசெட்டியா ரவர்களையும் சிறப்பித்து சைவத்திருவாளர் பா. சிதம்பரநாத பிள்ளையவர்கள் ஐந்து செய்யுட்கள் கூறியுள்ளார்.

ஆவணிமுதல் வலயபட்டி, விராமதி, விரையாச்சிலை, வெற்றியூர் ஆகிய ஊர்களிற்கூடிய சிவநேசர் திருக்கூட்டத்தைப்பற்றியும், குன்றக்குடி கந்தர்சஷ்டி மகத்துவம் பற்றியும், கண்டனூர் கார்த்திகைச் சோமவாரக் காட்சியைப் பற்றியும், பரிமணங்குடி வித்துவான் திரு. மு. முத்துப்பிள்ளையவர்கள் பல செய்யுட்கள் இயற்றியனுப்பியுள்ளார்.

# செய்தித் திரட்டு.

**காரைக்குடி:**— பாரதி பள்ளிக்கூட இரண்டாவது ஆண்டுவிழா, அப்பள்ளிக்கூடத்தில் டிசம்பர் 8ல் "ஊழியன் ஆசிரியர்" திரு. ராய. சொக்கலிங்கன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. 3-30க்கு விழா ஆரம்பமானதும் மாணவர்கள், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், பாரதியார் பாடல் முதலியவற்றை இன்னிசையுடனும், திரு. ஆத்மநாத பிள்ளையின் ஆர்மோனியத்துடனும் பாடினர். தலைவர் முன்னுரைக்குப் பின் பள்ளிக்கூட நிர்வாகஸ்தர்களிலொருவராகிய, திரு. திருநாவுக்கரசுசெட்டியார் ஆண்டறிக்கை படிக்க, மாணவர் மாணவிகளின் பேச்சு, பாட்டு, நடிப்பு, விகடம் ஆதிய நடைபெற்றன. நன்குதேர்ச்சிபெற்ற மாணவர்களும் குதலைவாய்ச்சிறுவர்களுமாக இருந்ததால் சபையோர் மிகுந்த உளப்பூரிப்பெய்தினர். சிற்சில மாணவர்கள், சுகாதாரம், தாம்பூலம் அடிக்கடி தரிப்பதனாலேற்படும் தீமைகள், இந்தியர்கட்குச் சிலவார்த்தைகள், மாணவர்கடமை, மோதிலால்நேருவின் வாழ்க்கை எனநிகழ்த்திய சொற்பொழிவுகள் பெரிய பிரசங்கிகளையும் தோற்கடிக்கத் தக்கதாயிருந்தன.

திரு. ப. ஜீவாநந்தன் - திரு. இ. சிவம் என்னு மிருவர்களும், ருஷிய நாட்டுக்கல்வி-சுதேசியம் என்னும் நீண்ட சொற்பெருக்காற்றினர். தலைவர் முடிவுரைகூறினர். எழுமணிக்குமேல் மாணவர்கள் "குலசேகரன்" நாடகத்தைத் தக்க பக்கவாத்தியங்களுடனும், நல்ல சீன்களுடனும் நடித்தனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்பெண்கள் வந்திருந்தனர். பலர் மெடல்களும், பூமாலைகளும்; தங்கச்சங்கிலிகளும் பரிசளித்தார்கள். மிகுந்த காகோஷத்துடன் நிர்வாகஸ்தர்நன்றிகூறி மாலைகளணிவிக்க 9-30க்குமுடிவுற்றது.

**நகரத்தார் ஸ்பெஷல்:**—ஸ்ரீ காசி இராமேஸ்வர யாத்திரை, பாதகண்ட பூமிபிரதக்ஷிணஞ் செய்ய, காரைக்குடி கல்லுக்கட்டி வடகரை விஸ்வநாதன் அண்டு கம்பெனியார், தைமீ ௪௨ மதுரையிலிருந்து ஸ்பெஷல் ரயில் தொடர் புறப்பட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது, மாசிமீ ௧௧௨ மகா சிவராத்திரி யன்று காசியில் கங்காஸ்நானமும், சிவராத்திரி தெரிசனமும், ௨௭௨ கும்பகோணத்தில் மகாமக ஸ்நானமும் செய்துவரும் நோக்கத்தோடு, பல க்ஷேத்திர யாத்திரைகளுடன் காசி இராமேஸ்வரம் போய், ௯௨ மானாமதுரை புதுக்கோட்டை வந்து பங்குனி ௨௨ மதுரைவந்து சேரும்.

**சிதம்பரம்:**—ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்கு ஆருத்ராதரிசன மகோற்சவம் இம்மீ ௧௧௨ தொடங்கி, ௨௮௨ காலை ஆயிரக்கால் மண்டபத்தில் மகாபிஷேகமும், அன்று 12. மணிமுதல் ஸ்ரீ சித்திரசபா பிரவேச ஆருத்ராதரிசனமும், உ[illegible] புஷ்பப்பல்லக்குக் காட்சியும் நடைபெறும்.

186922

186922

உ

# சிவநேசன்.

இப் பத்திரிகை ஒவ்வொரு தமிழ்மாத முதற்றிங்கட்கிழமைதோறும் மேன்மைமிக்க புலவர் பெருமக்களாலும் உண்மைப் பெரியோர்களாலும் வரையப்பெறும் சமயஉண்மை தமிழின் இனிமை சாதியவொழுக்கங்களின் நன்மையாதிய கட்டுரை பலவும் உலக நிகழ்ச்சிகளும் தன்னுட்கொண்டு வரும்.

## ஆண்டுத்தொகை விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ | 2 4 0 | அதற்கு மூலதனம் | ரூ | 30 0 0 |
| அயல்நாட்டிற்கு | ரூ | 3 0 0 | அதற்கு மூலதனம் | ரூ | 40 0 0 |

தனிப்பிரதி அணா 0 3 0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4 0 0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8 0 0

## நிருப நேயர்கட்கு அறிவிப்பு.

க. நமது சிவநேசனுக்கு நிருபம் வரைவோர் நமது பத்திரிகைநேயராயிருத்தல்வேண்டும். உ. வரையும் விஷயங்கள், சமயநிந்தனை சாத்திரநிந்தனை, தெய்வநிந்தனை, ராஜநிந்தனை ஆதிய நிந்தனைகளில்லாமலும், எவரையுங் குறிப்பிட்டுத் தாக்காமலும், பொதுவாகவும் நன்மை பயப்பனவாகவு மிருத்தல் வேண்டும். ங. பிழையின்றி நல்ல மையினால் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதல்வேண்டும். ச. வருங் கடிதங்கள் கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்திப் பிரசுரிக்கவும், பொருத்தமில்லாதவைகளைப் பிரசுரியாதுவிடவும் கூடும். ரு. பிரசுரிக்கப்படாத கடிதங்கள் கட்டுரைகள் திருப்பி யனுப்பப் படமாட்டா. சு. கடிதக்காரர்களின் அபிப்பிராயங்கட்குக் கடிதக்காரர்களே பொறுப்பாளிகளாவர்.

## சிவநேசன் அச்சுக்கூடம்.

இவ் அச்சுக்கூடத்தில் நன்முகூர்த்தப் பத்திரிகை முதலிய எல்லாவித அச்சு வேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நயமாக அவரவர்மனதிற்குகந்த வண்ணம் குறித்த காலத்தில் அச்சியற்றித் தருகின்றோம். அவைகட்குக் காகிதங்கள் அனைத்தும் எங்களிடத்து உள்ளன.

அமைச்சர்.

[illegible]ன்குடி 'சிவநேசன்' [illegible]ந்திரசாலையில் பத்திராதிபர்
ரா. [illegible]. ராம. [illegible] அச்சியற்றி வெளியிட்[illegible]